

# தமிழரசு


பிப்ரவரி 16-28, 1999, ரூ.3











# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை – 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்




★ சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை .......... 2

★ சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் சமத்துவ மணம் பரவும் .......... 13

★ பாலங்கள்–சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்கம் .......... 18

★ சாதிகளிடையே மோதிக்கொள்ளும் கொடியநிலை நீங்கவேண்டும் .......... 20

★ முல்லைப்பாட்டு .......... 23

★ பண்பாடு காப்பது தமிழனின் தனி இலக்கணம் .......... 27

★ சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள் .......... 30

★ திருவட்டார் தொகுதி .......... 31

★ மீனவர் நலன் .......... 32

★ குளச்சல் தொகுதி மேம்பாடு .......... 34

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தறித் தொழில் .......... 36

★ புனித சவேரியார் பேராலயம் .......... 39

★ மாமேதை ஷெய்கு பீர்முஹம்மது .......... 42

★ எங்கள் ஊர்ப் பிரச்சினை .......... 43

★ தீண்டாமை ஒழிப்பிற்குத் தீவிரப் பிரச்சாரம் .......... 48


## திருக்குறள்

***அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்***
***புறங்கூறா னென்றல் இனிது.***

*அறநெறியைப் போற்றாமலும், அவ்வழியில் நடக்காமலும்கூட இருக்கின்ற சிலர் மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசாமல் இருந்தால், அது அவர்களுக்கு நல்லது. - கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...*


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு – 2030
மாசி
பிப்ரவரி 16–28, 1999
மலர் : 30 இதழ் : 16
விலை ரூ.3


*முதல் பக்க அட்டையில்*

**சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை**


*கடைசிப் பக்க அட்டையில்*

**தமிழ்நாடு முழுதும் 102 பாலங்கள் – சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்க விழா**

**சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள் கட்டுமானப் பணிகள் தொடக்கவிழா**

# சிக்கனம் செயல்திறன் மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம்

## மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி பாராட்டு



மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

பதினோராவது சட்டப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1999 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி மேலும்

அதிகரிப்பதோடு தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்று நான் நம்புகிறேன்.

2. மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து, மாநில அரசின் பொறுப்புகள் மிகவும் கூடியுள்ள இந்த காலக் கட்டத்தில், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஆதாரங்களை மாநில அரசுக்கு மாற்றுவது அவசியமாகியுள்ளது. சென்ற ஆண்டு அமைக்கப்பட்டுள்ள பதினோராவது நிதிக்குழு , அதன் அறிக்கையை 1999 ஆம் ஆண்டு இறுதிக்குள் அளித்திட உள்ளது. விவேகமான நிதி நிர்வாகத்துக்கு பெயர் பெற்ற தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களின் நிர்வாகச் செயல் திறனைக் கருதி கூடுதல் நிதி அளிக்கப்படுவதற்குப் பதிலாக, பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை காரணமாக மத்திய அரசால் குறைந்த நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. பதினோராவது நிதிக்குழு இதற்கு உரிய முக்கியத்துவம் அளித்து, கூடுதல் நிதியாதாரங்களை நமக்கு அளிக்கப் பரிந்துரை செய்யும் என்று நம்புகிறோம்.

3. நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், மதச்சார்பின்மையையும் சமூக நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதோடு, மாநிலங்களுக்கு கூடுதலாக சுயாட்சி உரிமைகளைப் பெறுவதற்கும் அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளையும் மைய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவதற்கும், அதன் முதல் கட்டமாக தமிழ் மொழியை ஆக்குவதற்கும், சமூக நீதிக்கான இடஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரத்தை மாநிலங்களுக்கே அளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இவற்றில் அதிக முன்னேற்றம் எய்திட இயலவில்லை என்றாலும் இது குறித்து சட்டரீதியாகவும் நிர்வாக அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

4. இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிக்க இந்த அரசு எடுத்த உறுதியான தொடர் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வகையில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனளித்துள்ளதுடன் மக்கள் முழுமனதுடன் நல்கிவரும் ஆதரவும் இம்மாநிலத்தில் தொடர்ந்து அமைதியும், மத நல்லிணக்கமும் பேணிக்காக்கப்படுவதை உறுதி செய்யும் என்று இந்த அரசு நம்புகிறது.

5. தமிழ்நாட்டின் வரலாற்றில் நீண்டகாலமாகவே சாதி மோதல்கள் இருந்து வந்துள்ளன. சாதி மோதல்களின் பின்னணியில் உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறுவதைக் குறைக்க நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதற்கும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க 22.10.98 மற்றும் 26.10.98 ஆகிய நாட்களில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உருவான ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கொள்கை முடிவெடுத்து அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மத நல்லிணக்கத்திற்கும் சமூக

ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய, வன்முறையைத் தூண்டக் கூடிய ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் முதலியவற்றிற்கு அனுமதியளிக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகங்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது. சாதி, மத, வகுப்பு அமைப்புகள் வன்முறையைத் தூண்டக்கூடிய செய்திகளை அச்சிடுதல்/ வெளியிடுதல்/ சுவரொட்டிகள் ஒட்டுதல்/ சுவர்களில் எழுதுதல் ஆகியவற்றைத் தடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது. கிராம அளவில் "அமைதிக் குழுக்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் அடிமட்ட அளவிலான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கும் பயனுள்ள பணியைச் செய்வதுடன், இனிவரும் ஆண்டுகளில் மோதல்களையும் பிணக்குகளையும் தீர்த்து வைக்கும் முக்கிய அமைப்புகளாகவும் செயல்படும்.

6. இந்த ஆண்டு நமது மாநிலத்தில் மழையளவு மனநிறைவளிப்பதாக இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் அதிக அளவு மழை பெய்ததனால் வெள்ளமும், வெள்ளச் சேதங்களும் ஏற்பட்டன. அரசு அமைப்புகள் உரிய காலத்தில் எடுத்த நடவடிக்கையினால் உயிரிழப்பும் சொத்துக்கள் இழப்பும் பெரிதும் குறைக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும், சேதமடைந்த சாலைகள், கரைகள் முதலியவற்றைச் சீரமைக்கவும், அரசு சுமார் ரூ.33 கோடி வழங்கியுள்ளது.

7. மக்களின் அன்றாடப் பயனுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்ந்து வருவது இந்த அரசுக்கு மிகவும் கவலையளிக்கிறது. இன்றியமையாப் பொருட்களின் விலை நாடு முழுமைக்குமான பொதுவான பொருளாதாரக் கொள்கைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. மத்திய அரசினால் மட்டுமே விலைவாசி உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும். மாநில அரசின் அமைப்புகள் இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து அதிக அளவில் சந்தையில் விற்பதன் மூலம், விலைவாசியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்த இயலும். கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து, அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு, யூரியா போன்றவற்றின் விலையை மத்திய அரசு அண்மையில் உயர்த்தியுள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் நலனில் அக்கறையும், பொறுப்பும் கொண்டுள்ள இந்த அரசு, மைய அரசு அறிவித்துள்ள அரிசி விலை உயர்வினால் கூடுதல் மானியமாக சுமார் ரூ.160 கோடி அளவுக்கு இந்த அரசுக்கு சுமை அதிகரித்த போதிலும், இந்த விலை உயர்வை நுகர்வோர் மீது சுமத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

8. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி முடிக்கப்பட்டு 142 இலட்சம் குடும்பங்கள் புதிய குடும்ப அட்டைகளைப் பெற்றுள்ளன. புதிய அட்டைகளின் அடிப்படையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குவது

தொடங்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையின் கீழ் போதிய அளவு அரிசி கையிருப்பு வைத்துக் கொள்வதற்காக காவிரி கழிமுகப்பகுதிகளில் நடப்பு சம்பா பருவத்தின் போது ஏகபோகக் கொள்முதல் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கும் மேல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

9. மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டினை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1997–98 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4010 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. 1998–99ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப் பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4500 கோடியும் எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டு அளவை கணிசமான அளவிற்கு அதிகரிக்கச் செய்ய இந்த அரசு முயற்சி செய்யும்.

10. மாநிலத்தின் முக்கிய தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்கிடுவதற்கான வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள பாசன சீரமைப்புக்காகக் காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள கால்வாய்களிலும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஏரிகளிலும் தூர் வாரியதால், பாசனத்திற்கான நீர் கடைக் கோடியிலுள்ள பகுதிகளுக்கும் சென்றடைய முடிந்தது. மேலும், இப்பணியினால் இந்த ஆண்டில் பெருமழையின் பாதிப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. பாசனக் கால்வாய்களைத் தூர்வாருவதற்கு அடுத்த ஆண்டில் அரசு கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்யும். கடந்த பருவத்தின் போது மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்ததாலும், பாசனத்திற்கு அதிக அளவு தண்ணீர் கிடைத்ததாலும் இந்த ஆண்டு சுமார் 98 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், புன்செய் நில விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் அடுத்த ஆண்டில் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. நல்ல சாலைகள், குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் போன்ற தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், தரம் பிரித்தல் வசதிகளையும் செய்து கொடுத்திட விரைவுபடுத்தப்பட்ட தோட்டக் கலைப்பயிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் இந்த அரசு தொடங்கும். இந்த நடவடிக்கைகள் காய்கறி, பழங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதால், விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைவர்.

11. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், அதிக வேலைவாய்ப்பளிப்பதற்கும், அரசு அமைப்புகள் பொதுமக்களுக்கு ஆற்றும் பணியின் திறனையும், தரத்தையும் மேம்படுத்துவதற்கும், தகவல் தொழில் நுட்பவியலில் உள்ள வளவாய்ப்பைக் கருத்திற்கொண்டு, அத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்துறையின்

முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் அறிவுரைகள் வழங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் தகவல் தொழில்நுட்பப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் மேம்பாடு குறித்த புதிய கொள்கையை அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடாகும். தொழில் துறைக்கு அதிக தரம்வாய்ந்த பயிற்சி பெற்ற மனித ஆற்றலை வழங்கும் வகையில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை தரமணியில் ரூ.320 கோடி செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா ஒன்றை மாநில அரசு உருவாக்கி வருகிறது.

12. கணினி மற்றும் இணைய (Internet) வசதியை அனைவரும் எளிதாகப் பெறும் வகையில், இங்கிலாந்து நாட்டின் “வேர்ல்டுடெல்” நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு நிறுவனம் அமைத்து இந்தியாவில் முதலாவதாக மாநிலம் முழுவதிலும் வருமாண்டில் 1,500 சமுதாய இணைய மையங்களும், அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் 12000 இணைய மையங்களும் ஏற்படுத்தப்படும். இவை அனைத்தும் செயல்படும்போது நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் சுமார் 1,50,000 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த

### தீண்டாமைக்கு ஆதாரமில்லை



**தீ**ண்டாமை சமயத்தின் ஆதாரம் பெற்ற அனுஷ்டானம் அல்ல. அது சைத்தானின் ஒரு யுக்தியே. சைத்தான் எப்பொழுதுமே தனது செயல்களுக்கு சாஸ்திரங்களில் ஆதாரம் இருப்பதாகச் சொல்வது வழக்கம். ஆனால் எந்த சாஸ்திரமும் பகுத்தறிவையும், தர்க்க புத்தியையும் சத்தியத்தையும் மீறியதாய் இருக்க முடியாது.

– காந்தியடிகள்

இலக்கு எய்தப்படும். கணினி மென்பொருளுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தமிழ் வரிவடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுத்துவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் “தமிழ் இணையம் 99” என்ற சர்வதேச கருத்தரங்க மாநாடு பிப்ரவரி 7, 8 தேதிகளில் சென்னையில் நடத்தப்பட்டு ஒருமித்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழி அறியாதவர்களும் கணினியையும், இணைய வசதியையும் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும் வகையில் தரப்படுத்தப்பட்ட இத்தகைய கணினி தமிழ் மென்பொருள் பெரிதும் உதவும்.

13. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் துறையின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். இந்த அரசின் ஒளிவு மறைவற்ற, தொழில் நேயமிகுந்த கொள்கை காரணமாக புகழ்வாய்ந்த பல பன்னாட்டு நிறுவனங்கள், இம்மாநிலத்தில் பெருமளவில் முதலீடு செய்ய ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் தமிழ்நாடு நாட்டில் ஐந்தாம் இடத்தில்

இருந்தது. 1998 அக்டோபர் வரை ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகளின் அடிப்படையில், தமிழ்நாடு இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருப்பது பெருமிதத்தையும், மனநிறைவையும் அளிக்கக் கூடியதாகும். கடந்த 32 மாதங்களில் இம்மாநிலத்தில் ரூ.48,497 கோடி அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 'ஹூண்டாய்', 'மிட்சுபிஷி' மோட்டார் வண்டி நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஃபோர்டு மோட்டார் வண்டி நிறுவனம், 1999 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கும்.

14. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் முயற்சியாக, இந்த அரசு 'சிப்காட்', 'டாசிட்' போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும், தனியார் துறை தொழில் முனைவோருடன் இணைந்து கூட்டுத்துறை மூலமாகவும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் உருவாக்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் எண்ணூரில் பெட்ரோலிய ரசாயன தொழிற் பூங்காவையும், நாங்குனேரியில் உயர் தொழில் நுட்பப் பூங்காவையும் சிங்கப்பெருமாள் கோயில் அருகே மோட்டார் வண்டி துணைப் பாகங்கள் பூங்காவையும், ஓசூரில் மலர்ச்செடி வகைகளை வளர்ப்பதற்கான அடிப்படை வசதி பூங்காவையும் கூட்டுத்துறையில் உருவாக்கி வருகிறது. இந்த வசதிகள் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கும். அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் மேற்கொண்ட பயணம், அந்நாடுகளுக்கும் நமக்கும் இடையே உள்ள கலாச்சாரத் தொடர்பை வலுப்படுத்தியது மாத்திரமல்லாமல், அந்நாடுகளில் உள்ள தொழில் முனைவோர்களிடையே தமிழ்நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் தொழில்கள் தொடங்குவதிலும் முதலீடு செய்வதற்குப் பெருமளவு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

15. தொழில், வாணிபம், வேளாண்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு அதிகப்படியான மின் உற்பத்தி செய்வது இன்றியமையாததாகிறது. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியில் பெருமளவு தனியார் முதலீட்டை ஈர்ப்பதில் இந்த அரசு வெற்றி கண்டுள்ளது. அதையொட்டி இந்த அரசு பல்வேறு மின் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 196 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட முதலாவது தனியார் மின் உற்பத்தித் திட்டம் சென்னையில் பேசின் பாலத்தில் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சுமார் 2000 மெகாவாட் திறன் கொண்ட திட்டங்களுக்கான கட்டுமானப்பணிகள் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும். இதன் மூலம் முதல் கட்ட மின் உற்பத்தி 2000–2001 ஆம் ஆண்டில் தொடங்கும். ஜெயங்கொண்டத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி சுரங்க மின்உற்பத்தித் திட்டத்திற்கும், எண்ணூரில் திரவ இயற்கை வாயுவை அடிப்படையாகக் கொண்ட 2000 மெகாவாட் மின்உற்பத்தி திட்டத்திற்கும், பன்னாட்டளவிலான போட்டி ஏலத்தின் மூலம் வெளிப்படையான முறையில் ஒப்பந்தங்களை முடிவு

செய்து வழங்கியிருப்பது உலக அளவில் பாராட்டைப் பெற்றிருப்பதோடு முதலீட்டாளர்களிடையே தமிழக அரசின் மீதான நல்லெண்ணத்தையும், நம்பிக்கையும் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

16. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுச் சட்டம் இந்த அவையின் சென்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் முன்னேற்றத்திலும், மனிதவள மேம்பாட்டிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு இந்த அரசு உலகவங்கியை கோரியுள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் ஏற்பளிப்பிற்கான இறுதி நிலையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும் நகர்ப்பகுதி அமைப்புகளின் வளர்ச்சிக்கும் கணிசமான நிதியுதவி கிடைக்க இத்திட்டம் வகை செய்யும்.

17. மாநிலத்தின் தலைநகராகவும் முக்கிய வணிக மையமாகவும் திகழ்கிற சென்னைப் பெருநகர்ப்பகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. பெருநகர் விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடையும் போது மாநகரின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினை பெரிதும் குறையும். சென்னை மாநகரைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச் சாலைகளை அகலப்படுத்தி வலுவூட்டும் பணியும் விரைவில் தொடங்கப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னையில் முக்கியமான சந்திப்புகளில் பத்து சிறிய மேம்பாலங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு அடுத்த 15 மாதங்களுக்குள் முடிவு பெற இருக்கிறது. பெருநகர்ப்பகுதிக்கான வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி, கூவம், அடையாறு, பக்கிங்காம் வாய்க்கால், ஓட்டேரி நல்லா உள்ளிட்ட பகுதிகளில் விரைவில் தொடங்கப்படும். கோயம்பேட்டில் வெளியூர் பேருந்து முனையத்தைக் கட்டும் பணி அடுத்த மூன்று மாதங்களில் துவங்கும்.

18. ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் ஏழைக்குடும்பங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களின் மீது அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்காக, இந்த அரசு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதியையும் அளித்துள்ளது. ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வைத் தொடர்ந்து அளித்து வரும் நிலையில், அவற்றுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவது பற்றி பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அளித்துள்ளது. இப்பரிந்துரைகளின் மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

19. 1997–98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு மக்கள் நலனை மையமாகக் கொண்ட இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அவை "நமக்கு நாமே" என்ற திட்டமும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும்" ஆகும். இதுவரை 424 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு 55,086 ஊரக உள்கட்டமைப்புப் பணிகள் ரூ.357.79 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தேவையால் உந்தப்பட்டு மக்கள் பங்குகொள்ளும் "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,171 பணிகள் ரூ.42.39 கோடி செலவில் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. கடந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, நாள் ஒன்றுக்கு 10 லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வசதி பெறும் 5398 ஊரகக் குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வசதி அளிக்கும் பணி நடப்பாண்டில் தொடங்கி நடைபெற்று வருகிறது. மேலும் 6300 குடியிருப்புகளுக்கு முழுமையாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் பணி 1999–2000ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை நகர்ப்பகுதிகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த குடிநீர் வீட்டிணைப்பு வசதியை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த, ஐந்தாண்டு கால அளவில் ரூ.500 கோடி கடனுதவி பெறக்கூடிய வகையில் ஹட்கோ (HUDCO) நிறுவனத்துடன் உடன்பாட்டுக் குறிப்பில் (Memorandum of Understanding) அரசு கையொப்பமிட்டுள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் கடல்நீரைக் குடிநீராக்கும் அமைப்புகளை நிறுவ ஆஸ்திரிய அரசின் கடனுதவியை தமிழ்நாடு அரசு பெறவிருக்கிறது,

21. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சீரான சாலை வசதிகள் மிகவும் முக்கியமானவையாகும். நபார்டு (NABARD) வங்கியிடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் ரூ.702 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட 2661 பணிகளில், 1335 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஹட்கோ (HUDCO), நபார்டு (NABARD) வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன், ரூ.360 கோடி செலவில் 104 பாலங்களைக் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடனான தமிழ்நாடு சாலைப்பகுதித் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும்.

22. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தை எய்தும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த அரசு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. இந்த சமத்துவபுரங்களில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் நட்புறவுடனும் நல்லிணக்கத்துடனும், அமைதியாகவும், குடிநீர், மின்சாரம்,

சமுதாயக்கூடம், போன்ற பொது வசதிகளைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன, 83 சமத்துவபுரங்கள் உருவாகி வருகின்றன. இத்திட்டம் தொடர்ந்து முனைப்புடன் செயற்படுத்தப்படும்.

23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக அரசு ஒவ்வோராண்டும் அதிக நிதி ஒதுக்கி வருவதோடு, அவர்களுக்காக புதுமையான திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினரின் வளர்ச்சிக்கும் கல்வி மிகமுக்கியமானதோர் திறவுகோல் என்பதால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக அரசு பயனுள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

24. மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கிய அதே மனிதாபிமான கொள்கையுடன், மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும் சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்றுவதற்காக சட்ட முன் வடிவு ஒன்றினை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வர இந்த அரசு முடிவு செய்துள்ளது.

25. விவசாயிகளின் குறைந்த பட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

26. 1998–99 ஆம் ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியது மட்டுமல்லாமல், சமத்துவபுர கிராமங்களிலும் அப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டுக்குள் 300க்கு அதிகமான மக்கள் தொகையுள்ள அனைத்து குக்கிராமங்களும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள், எளிதில் செல்லக்கூடிய வகையில் ஒரு தொடக்கப்பள்ளியைப் பெற்றுவிடும். அவற்றுக்கான கட்டமைப்புப் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எட்டும் பொருட்டு முதல் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடநூல்களை இந்த அரசு வழங்கியுள்ளது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில் தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் இக்கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கல்வி ஆண்டிலிருந்து ஊரகப் பகுதி மாணவர்களுக்கு 15 விழுக்காடு அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இது ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் தொழிற் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் உதவும்.

27. கி.பி. 2000 ஆண்டுக்குள் "அனைவருக்கும்

நல்வாழ்வு" என்ற இலக்கை எய்துவதில் மாநில அரசு அக்கறை கொண்டுள்ளது. கடந்த மூன்றாண்டு காலத்தில் 652 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்கச் சுகாதார நிலையங்களும் நிரந்தரமான கட்டிடங்களில் இயங்கும். மேலும், சிறந்த மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ நிறுவனங்களும் மருத்துவமனைகளும் போதிய சாதனங்களைப் பெறுவதோடு, அவை உரியவாறு பராமரிக்கப்படுவதையும் இந்த அரசு உறுதி செய்யும். இந்தியாவின் மிகப் பழமையான மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான சென்னை மருத்துவக் கல்லூரிக்கு நிகர் நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தூத்துக்குடியில் புதிய மருத்துவக் கல்லூரி வரும் கல்வி ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கும்.

28. கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிரளிக்கவும், மேம்படுத்தவும் இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்த அவை அறியும். கைத்தறித் துணி விற்பனைக்கான 20 சதவீதத் தள்ளுபடி ஆண்டு முழுவதும் கிடைக்க வகை செய்யப்பட்டது. பெருமளவு தேங்கியுள்ள முந்தைய ஆண்டுகளின் கைத்தறித் துணியின் தேக்கத்தைக் குறைப்பதற்காக நடப்பாண்டில் 1998 அக்டோபர் திங்கள் வரை 30 சதவீதத் தள்ளுபடி வழங்கப்பட்டது. இந்தச் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், 'கோ–ஆப்டெக்ஸ்' நிறுவனம் ஆகியவை ரூ.202 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்ய முடிந்தது. இதுதவிர, விற்பனையாகாமல் பெருமளவில் லுங்கிகள் தேங்கிவிட்டதைக் கருத்திற் கொண்டு, அவற்றிற்கு 30 சதவீத சிறப்புத் தள்ளுபடியை 31.3.1999 ஆம் நாள் வரை நீட்டித்து அரசு வழங்கியுள்ளது.

29. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று 2,80,556 கிராமப்புற பெண்கள், 14,374 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகி மகளிர் திட்டத்தின் கீழ் உதவி பெற்று வருகின்றனர். இவர்கள் குழுக்களாகச் செயல்பட்டு சேமித்துள்ள மொத்தத் தொகை சுமார் ரூ.19 கோடியாகும். இது வளர்ந்து வரக்கூடிய ஒரு சுழல் நிதியாகும். இந்த நிதித்தொகுப்பிலிருந்து உறுப்பினர்கள் தங்கள் அவசரத் தேவைக்கும் ஏனைய கடன் தேவைகளுக்கும் எளிதில் கடன் பெறுவதுடன், பெற்ற கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தி வருகின்றனர். வரும் ஆண்டில் எஞ்சியுள்ள ஏழு மாவட்டங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு



வரப்படும். மேலும் நகர்ப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஒரு முன்னோடி திட்டமாக சேமிப்புடன் இணைந்த மகளிர்க்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்றை, இந்த அரசு முதற்கட்டமாக, சென்னையில் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பிற நகர்ப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.

30. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும், நடைமுறைச் சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள் குறித்த நீதிபதி திரு. இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு உரிய முடிவெடுத்து அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வறிக்கையும் அதன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளும் இக்கூட்டத் தொடரில் அவையில் வைக்கப்படும்.

31. அரசின் வளர்ச்சிப் பணிகளையும் ஒழுங்குமுறைப் பொறுப்புகளையும் ஆற்றுவதில், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள் ஆகியோரின் முக்கிய பங்கினை முற்றிலும் அறிந்துள்ள இந்த அரசு, இந்தப் பணியாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் பரிவுடன் செயல்பட்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், தமிழ்நாடு அரசு அதன் பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் மத்திய சம்பள வீதங்களை அளித்ததில், அதுவும் 1.1.1996 ஆம் நாளிலிருந்து முன்தேதியிட்டு அளித்ததன் மூலம் தென் மாநிலங்களிலேயே முதலிடம் வகிக்கிறது. பணிநியமன நடைமுறைகளைச் சீரமைத்ததன் வாயிலாகவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த மூப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டதன் மூலமும், அரசுப் பணிகளில் நியமனம் தொடர்பான புகார்கள் பெரும்பாலும் நீக்கப்பட்டுள்ளன.

32. பொருளாதாரத்தில் நிலவும் மந்த நிலையுடன், அதிகரித்து வருகின்ற அரசுச் செலவும் சேர்ந்து, மாநில அரசின் நிதி ஆதாரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சிக்கனம், செயல்திறன், மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம் ஆகியவை இந்த அரசின் கோட்பாடுகளாகத் தொடர்ந்து இருக்கும். பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள் கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப் பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அரசின் திட்டங்களும் திட்டப்பணிகளும் உரிய காலத்திற்குள் முடிவுறுவதை உறுதி செய்யும் வகையில் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்படும்.

33. இந்த அரசின் சாதனைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை உங்கள் முன் எடுத்துரைத்துள்ளேன். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும், சமுதாய நலன்களைப் பேணிக்காத்திடவும், நலிவுற்ற மக்களின் நம்பிக்கை அரணாகத் திகழவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருமைக்குரிய இந்த அவையில் உங்கள் விவாதமும் கருத்துப் பரிமாற்றங்களும் அரசு அதன் கொள்கை குறிக்கோளை எய்திட உதவும் என்ற எதிர்பார்ப்புடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி
தமிழ்நாடு சட்டப்பேரவையில் 17–2–1999 அன்று
ஆற்றிய உரை.

# சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் சமத்துவ மணம் பரவும்


– முதலமைச்சர் கலைஞர் உரை

நாமக்கல் மாவட்டத்தில் 15, 16ஆவது சமத்துவபுரங்கள் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெள்ளம் போல் குழுமியிருக்கின்ற உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்கிறேன். இந்த அரசின் சார்பாக தொடங்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள், புதிய பணிகள், மக்களோடு தொடர்பு கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள புதியச் சாதனங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**இன்றியமையாத கையேடாகத் திகழும் "மக்கள் சாசனம்"**

இந்த அரசின் சாதனைகளில் ஒன்றாக ஒவ்வொரு துறையின் சார்பிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் சாசனம் என்ற ஒரு புத்தகம் வெளியிடப்படுகிறது. இந்தப் புத்தகத்தின் அவசியத்தை நீங்கள் படித்துப் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும். அந்த அளவிற்கு இன்றியமையாத ஒரு கையேடாக மக்கள் சாசனம் என்கின்ற இந்த நூல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் சார்பாக, அந்தந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரின் முயற்சியால் வெளியிடப்படுகிறது. இதில் எல்லாவிதமான துறைகளைப் பற்றிய விவரங்களும் இருக்கிறது.

சாதாரண சாமானிய மக்கள், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், ஏன்? பேரூர், நகரங்களில் வாழ்கின்ற மக்கள் கூட என்னென்ன துறைகள் இருக்கின்றன, அந்தத் துறைகளின் சார்பாக நடைபெறுகின்ற காரியங்கள் எவை, எவை, எந்தெந்த அலுவலகத்திலே, எந்தெந்த அதிகாரிகளை அணுகினால் இந்தப் பயன்களைப் பெறமுடியும் என்கின்ற எல்லாவிதமான விவரங்கள் அடங்கியது இந்த மக்கள் சாசனம் என்கின்ற கையேடு. அதில் குறிப்பாக நாமக்கல் மாவட்டத்திற்காக ஆட்சித்தலைவர் முயற்சி எடுத்து வெளியிட்டு உள்ள இந்த கையேட்டில் பல செய்திகள் முன்னுரையாகவே அடங்கியிருக்கின்றன. இந்த மாவட்டம் ஒரு சிறிய



வரலாற்றை தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டம் இன்றைக்கு சேலத்தில் இருந்து பிரிக்கப்பட்டு நாமக்கல் மாவட்டமாக இருந்தாலுங்கூட சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் எனக்கே கூட இந்த மக்கள் சாசனத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு செய்தி இதில் வெளிவந்திருக்கிறது.

**சேலம்–தருமபுரி மாவட்டங்கள் உருவான வரலாறு**

கிழக்கிந்திய கம்பெனிப் படைக்கும், திப்பு சுல்தானுக்குமிடையே நடைபெற்ற போராட்டம் ஒரு முடிவுக்கு வந்து 1792ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கிந்திய கம்பெனி என்பது வெள்ளைக்காரர்களால், ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட கம்பெனி. அது கம்பெனியாக வந்து, இந்திய நாட்டையே அடிமைக்கொண்ட நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த ஒப்பந்தத்தின்படி திப்புசுல்தானிட மிருந்து பெறப்பட்ட பகுதிகளைக் கொண்டு "பாரமஹால் மற்றும் சேலம்" என்ற ஒரு மாவட்டம் 1792இல் உருவாக்கப்பட்டது. அப்போது இந்த மாவட்டத்திற்கு பெயரே பாரமஹால் மற்றும் சேலம். தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட பாரமஹால் – அப்போது சமஸ்தானம் என்று பெயர். 12 சமஸ்தானங்களை கொண்ட தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாரமஹால் மற்றும் சேலம் மாவட்டத்தில் சில பகுதிகள் இதில் அடங்கியிருந்தன.

இந்த இரண்டுக்கும் சேர்த்து முதல் ஆட்சித் தலைவராக அலெக்சாண்டர் பொறுப்பேற்றிருந்தார். அலெக்சாண்டர் என்றால் மாவீரர் அலெக்சாண்டர் அல்ல. ஆங்கிலேயர்களில் ஒரு துரை அலெக்சாண்டர் என்பவர். அவர் இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் ஆட்சித் தலைவராக அப்போது பொறுப்பேற்றிருந்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு இது கிருஷ்ணகிரியை தலைநகராகக் கொண்ட பாரமஹால் மாவட்டம் என்றும், சேலத்தை தலைநகராகக் கொண்ட தாலக்காடு மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

வீரபாண்டிக்குச் சொல்லிக் கொள்கிறேன். தாலக்காடு மாவட்டத்தை தலைநகராக சேலம் அன்றைக்கு இருந்தது. கிருஷ்ணகிரியை தலைநகராகக் கொண்டு பாரமஹால் மாவட்டம் அன்றைக்கு செயல்பட்டது. பின்னர் 1801இல் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது. பின்னர் 1808இல் ஈ.ஆர். ஹார்க்ரேன் மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்றபோது இது சேலம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தாலக்காடு மாவட்டத்திற்கு சேலம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாவட்ட தலைநகரம் தருமபுரியிலிருந்து சேலத்திற்கு 1830இல் மாற்றப்பட்டது. அதுவரையிலே தருமபுரி தலைநகரமாக இருந்தது. 1830இல் அது சேலத்திற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து சில ஆண்டுகளில் தலைநகரம் ஒசூருக்கு மாற்றப்பட்டு 1860இல் மீண்டும் ஆட்சித் தலைவர் அலுவலகம் சேலத்திற்கு மாற்றப்பட்டது. இப்படியும் பந்தாடப்பட்டிருக்கிறது இரண்டு மாவட்டத்திற்கான தலைநகரங்கள்.

**வரலாற்றுச் செய்திகளைக்கூட மக்கள் சாசனம் கொண்டுள்ளது**


1965இல் சேலத்திலிருந்து சேர்வராயன் மலைக்கு வடக்கில் உள்ளப் பகுதிகள் தனியாக பிரிக்கப்பட்டு தருமபுரி மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது. 96–இல் சேலம் இரண்டாக பிரிக்கப்பட்டு இந்த ஆட்சியில், நாமக்கல்லைத் தலைநகராக கொண்ட நாமக்கல் மாவட்டமும், சேலத்தைத் தலைநகராக கொண்ட சேலம் மாவட்டமும் பிரிக்கப்பட்டன. அந்த நாமக்கல்லைத் தலைநகராக கொண்ட மாவட்டத்தில்தான் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்வளவும் நான் சொல்லக் காரணம் இவ்வளவுநாள் நான் இதுவரை தெரிந்து கொள்ளாத அரிய செய்திகளை, வரலாற்றுச் செய்திகளையெல்லாம் கூட உள்ளடக்கியதாகத்தான் இந்த மாவட்டத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள மக்கள் சாசனம் என்ற இந்த நூல் விளங்குகிறது. இவைகள் நம்முடைய அரசின் சார்பில் ஆங்காங்கு இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற மக்கள் நலப் பணியாளர்கள் மூலமாக மக்களுக்கு தெரிவிக்கப் படுகின்றன.

ஏற்கெனவே மக்கள் நலப் பணியாளர்கள் 1989–90 ஆண்டுகளிலே நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கால கட்டத்தில் ஏறத்தாழ 15 ஆயிரம் பேர் கிராமப்புறங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். 91–ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டு, புதிய ஆட்சி புரட்சிகரமான ஆட்சி (?) பொறுப்பேற்ற நேரத்தில் முதல் வேலையாக அந்த 15 ஆயிரம் பேரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு மீண்டும் நான்காவது முறையாக நான் பொறுப்பேற்ற பிறகு அந்த 15 ஆயிரம் பேரும் மீண்டும் மக்கள் நலப் பணியாளராக தொடர்ந்து பணியாற்றுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

**பொதுமக்களுக்குத் தெரிய வேண்டிய தெளிவடைய வேண்டிய விபரங்கள்**

இந்த மக்கள் சாசனத்திலே குறிப்பிட்டிருக்கின்ற எல்லா விவரங்களும் பொதுமக்களுக்கு தெரிய வேண்டிய விவரங்கள். தெளிவடைய வேண்டிய விவரங்கள். எங்கே சென்றால்இதைப் பற்றி தெரிந்துக் கொள்ளலாம்.





இதற்காக உதவிகள் பெறலாம் என்கிற வரையிலே எல்லா மக்களுக்கும் தெரியக்கூடிய – தெரிய வேண்டிய விவரங்களை மக்கள் நலப் பணியாளர்கள் மூலமாக – அவர்கள் முதலிலே அதைப் படித்து அவர்கள் விளக்குவதற்கு – ஏற்ற வழிவகைகள் இந்த ஆட்சியிலே செய்யப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் இங்கு பேசிய மாவட்ட ஊராட்சித் தலைவர் தம்பி வீரப்பன் குறிப்பிட்டதைப்போல மக்களுக்கும், அரசுக்கும் இடையிலே உள்ள தொடர்புகள் மேலும் வலுவாக்கப்பட வேண்டும், விரிவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு இதைக் கூட செய்வதற்கு முன்பிருந்த அரசுகள் முயற்சிகள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த மாவட்டத்திலே ஏற்கெனவே அடிக்கல் நாட்டப்பட்ட பணிகள் நிறைவுற்று, தொடங்கி வைக்கப்படுகின்ற பல திட்டங்கள். புதிதாக தொடங்குகிற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிற நிகழ்ச்சிகள் இத்தனையும் இணைத்து ஏறத்தாழ பல்வேறு துறைகள் மூலமாக ரூ.42 கோடியே 67 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகள் இந்த விழாவின் வாயிலாக நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு பயனளிக்கும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சமத்துவபுரத்திற்கான கருத்துரு எப்படி உருவானது ?**

மேட்டுப்பட்டியிலும், குன்னமலையிலும் சமத்துவபுரங்கள் உருவாகி இருக்கின்றன. இந்த சமத்துவபுரங்கள் 15, 16–வது சமத்துவபுரங்கள் ஆகும். இந்த சமத்துவபுரங்களை உருவாக்க வேண்டும் என்கின்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பதையெல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள். தமிழகத்தில் மக்களுக்காக – மக்களால் உருவாக்கப்பட்டு மக்களுக்காக நடைபெறுகின்ற இந்த ஆட்சி மக்களுக்கு செய்கின்ற திட்டங்கள் ஒழுங்காக சரியாக, செம்மையாக அவர்களுக்கு போய்ச் சேர்ந்து, அவர்களுடைய வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கக்கூடிய இந்நிலை இன்றைக்கு பல இடங்களில் ஏற்பட முடியாமல் ஆங்காங்கே சாதிச் சண்டைகள், மதவாத மோதல்கள் ஏற்படுவதை எல்லாம் கண்டபோது நான் துடித்துப் போனேன். பல நேரங்களில் ரத்தக் கண்ணீர் வடிக்கக் கூடிய அளவிற்கு நம்முடைய சமுதாய மக்கள் ஒருவரோடு ஒருவர் மோதி ஆங்காங்கு தெருக்களில், வீதிகளில் ரத்தத்தைச் சிந்திக் கொள்கின்ற காட்சியை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இவைகளை எப்படி சரி செய்வது என்று எண்ணியபோதுதான் இந்த அரசின் சார்பில் இத்தகைய ஒரு திட்டத்தை தொடங்கினால் என்ன என்ற ஒரு கருத்துரு உருவாகிற்று. அப்போது எனக்கு ஒரு ஐயம். எல்லா சமுதாயத்தில் உள்ள மக்களையும், 100 வீடுகளைக் கட்டி, ஒவ்வொரு பகுதியிலும் அந்த 100 வீடுகளில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களை குடி அமர்த்தினால் நன்றாகத்தான் இருக்கும். திருப்திகரமாகத்தான் இருக்கும். சமத்துவ நோக்கத்தை உருவாக்கக்கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் அந்த மக்கள் வருவார்களா என்ற சந்தேகம் எனக்கு நிச்சயமாக ஏற்பட்டது.

பல திட்டத்தை தொடங்கி ஆங்காங்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் – இங்கே நண்பர் நம்முடைய கட்டாரியா போன்றவர்கள் – வேறு பல மாவட்டங்களிலே ஆங்காங்கு உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பணியை வேகமாக நடைமுறைப்படுத்த முன்வந்ததும், எங்களுக்கு உங்களுக்கு என்ற அளவுக்கு ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு இந்த வீடுகளைப் பெறுகின்ற முயற்சியிலே பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு அவர்களுக்கெல்லாம் நேர்மையான முறையில், நாணயமான முறையில் அவர்களைத் தேர்வு செய்கின்ற குழுக்கள் சில இடங்களிலே அமைக்கப்பட்டு – சில இடங்களில் குலுக்கல் முறையிலே அவர்களுக்கு இந்த இடங்களெல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன.

**மேலும் 2 சமத்துவபுரங்கள் அமைய இருக்கின்றன**

ஒரு மாவட்டத்தில் இன்றைக்கு இரண்டு சமத்துவபுரங்கள். மேலும் இதே நாமக்கல் மாவட்டத்தில் மூன்றாவது சமத்துவபுரம், இந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மூன்றாவது சமத்துவபுரம். ராசிபுரம் வட்டம் – அர்த்தனூரில் அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் 4–வது சமத்துவபுரம் திருச்செங்கோடு வட்டம், சிறுமொலசி கிராமத்தில் இன்றைய விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் கேட்கலாம். யாரும் எண்ணலாம். ஒரு மாவட்டத்திலே 4 இடங்களிலே நூறு, நூறு வீடுகளைக் கட்டி அதற்கு சமத்துவபுரம் என்று பேர் வைத்தால் அந்த மாவட்டம் முழுவதும் சமத்துவபுரமாக ஆகிவிடுமா? என்றால் மெல்ல மெல்ல படிப்படியாக முதலிலே மாவட்டம் பிறகு மாநிலம், பிறகு நாடு சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

**சமத்துவபுர இல்லங்களால் சமத்துவ மணம் பரவும்**

இந்த மாவட்டம் முழுவதும் — ஒரு தோட்டத்தில் ஒரே ஒரு மல்லிகைச் செடி இருந்தாலுங்கூட, அதன் மணம் தோட்டம் முழுவதும் பரவுவதைப் போல — இந்த மாவட்டத்திலே, நாமக்கல் மாவட்டத்திலே இப்பொழுது 4 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டாலும், சமத்துவ மணம் இந்த மாவட்டம் முழுவதும் பரவும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டப்படுகின்ற இந்த சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் இந்த மணம் பரவும். இந்த மணம் இப்படி பரவுவதை இங்கே உள்ள சில பேர் வேண்டுமானால் கேலி செய்யலாம். சமத்துவபுரம் கட்டினால் ஆதிதிராவிடர்களுக்கு எல்லா வளமும் குவிந்துவிடுமா? என்றெல்லாம் அவர்களை வைத்தே பிழைக்கின்ற சில தலைவர்கள் கூறலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இங்கே நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல, தம்பி துரைமுருகன் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல என்னுடைய பொது வாழ்க்கை ஆரம்பம் இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்றாலுங்கூட மிகமிக தொடக்க நிலையில் பெரியார் அவர்களுடைய பாசறையில் இருந்த நான் முதலில் பெரியாருடைய கொள்கையைப் பிரச்சாரம் செய்த இடம் ஆதிதிராவிடர்களுடைய காலனிகள்தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால் அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு 69—ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் என்னென்ன துறைகள் இந்த அரசிலே இருக்கின்றன, எப்படி செயல்படுகின்றன என்ற ஒரு ஆய்வை நடத்தினேன். அப்படி நடத்தியபொழுதுதான் அரிஜன நலத்துறை, பிற்படுத்தப்பட்ட நலத்துறை இரண்டும் ஒரே துறையாக அன்றைக்கு இருந்தது. ஒரே அமைச்சர் அன்றைக்கு இரண்டு அமைச்சர் கிடையாது. ஒரே அமைச்சர்தான். அரிஜன நலத்துறையும் கவனிப்பார். பிற்படுத்தப்பட்ட நலத்துறையையும் கவனிப்பார். அதை நான் எண்ணிப் பார்த்தேன். இரண்டு துறைக்கும் ஒரே அமைச்சர். இரண்டு துறையும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட சமுதாய மக்களுக்காக இருக்கின்ற துறை இந்த இரண்டையும் ஒருவரே கவனித்தால் இரண்டு பேருக்கும் நன்மை கிடைக்காது என்று கருதி அப்பொழுதுதான் ஆதிதிராவிட நலத்துறை என்று தனியாக ஒரு துறையும், அதற்கு தனியாக ஒரு அமைச்சரையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று தனியாக ஒரு துறையும், அதற்கு தனியாக ஒரு அமைச்சரையும் அன்றைக்கு நான் நியமித்தேன் என்ற வரலாற்றை இன்றைக்கு சமுதாய நலங்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். அதன்பிறகு பிற்படுத்தப்பட்டவர் களிடையே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அதற்காக போராடி பழைய ஆட்சியில் பல பேர் உயிரிழந்தார்கள். இந்த உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும் நான்தான் நிதி உதவி செய்து அந்த மக்கள் எதற்காக போராடினார்களோ அதை நிறைவு செய்கின்ற வகையிலே 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்கி இன்றைக்கு அதனுடைய பலனை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் இருந்த இடஒதுக்கீட்டில் பதினைந்து சதவிகிதம்தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதை 16 ஆக ஆக்கி, 18—ஆக ஆக்கி இன்றைக்கு 18 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கு, 1 சதவீதம் மலைவாழ் மக்களுக்கு என்று 19 சதவீதம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலை உருவாக்கியதும் தி.மு.கழக ஆட்சியில்தான். அண்ணாவுடைய உண்மையான தம்பியாகிய நாங்கள் நடத்தும் இந்த ஆட்சியிலேதான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சாதாரண, சாமான்ய, நடுத்தர மக்களுக்காக பாட்டாளி மக்களுக்காக தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உங்களால் அமைக்கப்பட்டு உங்களுக்காக அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியினுடைய திட்டங்கள் உங்களுக்கு நல்ல வழியிலே வந்து சேருவதற்காகத்தான் பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

**"எகனாமிக் டைம்ஸ்" ஏடு பாராட்டி எழுதிய கட்டுரை**

இங்கே தம்பி வீரபாண்டி ஆறுமுகம் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி, 'நமக்கு நாமே' திட்டத்தைப் பற்றி எடுத்துரைத்தார். புகழ்ந்து பேசினார். நாம் இதைப் பாராட்டுவதைவிட, புகழ்வதை விட 'எகனாமிக்ஸ் டைம்ஸ்' என்ற பத்திரிகை வெளிமாநிலத்திலிருந்து டெல்லியிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் 29.1.99 அதாவது ஜனவரி மாதம் 29—ஆம் தேதி. ஒரு நீண்ட கட்டுரை வெளிவந்திருக்கிறது. அது முழுவதையும் நான் படிக்க விரும்பவில்லை. கட்டுரைத் தலைப்பு. "சமத்துவபுரம் டுவர்ட்ஸ் ஈகுவாலிட்டி" ("Samathuvapuram Towards Equality") என்பதாகும். இந்த தலைப்பில் இந்தக் கட்டுரை வெளியாகி இருக்கிறது. அஜய் மேனன் என்பவர் அந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார். மிக நீண்ட கட்டுரை. அதில் குறிப்பிடுகிறார்.

*"The search for a just free & prosperous society has occupied the minds of visionaries the world over. The move towards fulfilling these aims has been epitomised in India by the serene counsel of Mahatma Gandhi who upheld the principles of Swadeshi, Swaraja & Self sufficiency. Tamil Nadu is fortunate that its Chief Minister M.Karunanidhi not only cherishes a vision but seeks to implement it through projects like the Anna Renaissance Scheme, the Self Help Programme and the Samathuvapuram (Equality Village) Initiative"*

**இதனுடைய தமிழாக்கம் :–**

*“உலக முழுவதிலும் தொலைநோக்குப் பார்வையுடன் சுதந்திரமும் வளமும் நிறைந்த ஒரு சமுதாயம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் அதனை உருவாக்குவதற்கான முயற்சி, சுதேசி, சுதந்திரம், தன்னிறைவு ஆகியவற்றை வலியுறுத்திய அமைதியின் தூதுவர் மகாத்மா காந்தியால் மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற ஒரு தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருப்பதோடு மட்டுமின்றி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் போன்ற திட்டங்களின் மூலம் அவற்றைச் செயல்படுத்தியும் வரும் முதல்வர் கருணாநிதி அவர்களைத் தமிழ்நாடு பெற்றிருப்பது நற்பேறாகும்”.*

*என்னை நீங்கள் பெற்றிருப்பது நற்பேறு என்று ஆங்கிலப் பத்திரிகை எகனாமிக் டைம்ஸ் கூறுகிறது. உங்களையெல்லாம் தமிழகத்தினுடைய பெருமக்களாகப் பெற்று உங்களை ஆள்வது நான் பெற்ற நற்பேறு என்று கூறி விடைபெறுகிறேன்.*

*– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்*
*நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டி மற்றும்*
*குன்னமலையில் சமத்துவபுரங்களை திறந்துவைத்து*
***10–2–1999** அன்று ஆற்றிய உரை.*

# அதங்கோட்டாசானும் தொல்காப்பியமும்



அகத்தியரின் 12 மாணவர்களில் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், பணம்பாரானார் ஆகியோர் முக்கிய மானவாகள் என்ற இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியருக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் அதங்கோட்டாசானை

*அறங்கரை நாவின் நான்மறை முற்றிய*
*அதங்கோட்டாசாற்கு அரிதபத் தெரிந்து*

எனக் குறிப்பிடுகிறார். இதற்கு நச்சினார்க்கினியார் அறமே கூறும் நாவினை உடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த அதங்கோடு என்ற ஊர் ஆசிரியனுக்கு என்று பொருள் கூறுகின்றார்.

தொல்காப்பியரையும், அதங்கோட்டாசானையும் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்குக் குமரி மாவட்ட வழக்காற்றுச் சொற்கள் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் வையாபுரிப்பிள்ளையும், அறவாணனும் காரணம் கூறுகின்றனர்.

தொல்காப்பியம் பாண்டி நாட்டில் அரங்கேற்றியது என்றும், தொல்காப்பியரின் சக மாணவரான அதங்கோட்டாசான் தென்பாண்டி நாட்டு அரசனின் கீழ் அடங்கிய பாண்டிய குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று உள்ள செய்திகளை ஒப்பு நோக்கும்போது தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினர் என்றும் கூறமுடியும். தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினர் என்பதற்கு நிறையவே காரணங்கள் கூறுகின்றார் அறவாணன். இவர் தொல்காப்பியத்தின் வழக்கு இன்றைய குமரி மாவட்டத்தில் நடைமுறையில் நிறையவே இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். இவரது காரணங்கள் பின்வருமாறு

தொல்காப்பியத்தில் உள்ள பல வழக்காறுகள் குமரி மாவட்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

தொல்காப்பியர் குழந்தை உறவு முறையை மக்கள் முறை என்கிறார். குமரி மாவட்டத்தில் குழந்தைகளை மக்கா என அழைக்கும் முறை உள்ளது. காதை செவி என்று கூறும் மரபு குமரி மாவட்டத்தில் உள்ளது. இவை தொல்காப்பியத்திலும் வருகிறது.

குழந்தை குட்டிகளைக் கன்று கயந்தலை எனக்கூறும் குமரி மாவட்ட வழக்கைத் தொல்காப்பியர் உவமையில் கூறுகிறார். (24) இவ்வழக்குப் பாலைக் கலிப்பாவிலும் வருகிறது.

குமரி மாவட்ட பேச்சு வழக்கு சொல்லான வாழைக்குலை என்றச் சொல்லைத் தொல்காப்பியர் மரபியலில் குறிக்கின்றார். புள்ளிமயங்கியலில் தாழ்க்கோல் என்பதன் புணர்ச்சி விதியைத் தொல்காப்பியர் கூறுகின்றார். சாவி என்றச் சொல்லைத் தாழ்க்கோல் என வழங்கும் மரபு குமரி மாவட்டத்தில் உள்ளது.

நாழி, உழக்கு என்ற முகத்தலளவு குமரி மாவட்டத்தில் இன்றும் நடைமுறையில் உள்ளது. இதனைத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறுகிறார். குமரி மாவட்ட வழக்காறுகளான வளி (ஆசனவாய்) விளித்தல் (கூப்பிடுதல்) குட்டி (குழந்தை) பட்டி (நாய்) ஆகியவற்றைத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

தொல்காப்பியர் குமரி மாவட்ட வழக்காறுகளைத் தன் நூலில் குறிப்பிடுவதற்கு அவர் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவராய் இருந்ததே காரணம் என்பர். தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வழக்காறுகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. இன்று பிற மாவட்டங்களிலும் இவ்வழக்கு நடைமுறையில் இல்லை. எனவே தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினாராக இருக்கலாம் என்பது வையாபுரிபிள்ளை, அறவாணன் ஆகியோரின் முடிவு.

*நன்றி* : கன்னியாகுமரி ஆய்வுப் பக்கங்கள்

# பாலங்கள் - சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்கம்

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை மிக இன்றியமையாதன. 1996ஆம் ஆண்டு மே மாதம் தமிழக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் போக்குவரத்து வசதியை மேம்படுத்த 1997ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கென ஒரு தனி அமைச்சகத்தையும் 1998ஆம் ஆண்டு இத்துறைக்கென தனியே ஒரு அமைச்சரையும் நியமித்தார். இம்முயற்சியின் விளைவுதான் தமிழகத்தில் சாலைகளையும் பாலங்களையும் சீரமைக்க இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் அரசு பொறுப்பில் உள்ள நெடுஞ்சாலைகளில் 1,315 மிகப்பெரிய பாலங்கள் 7,014 சிறு பாலங்கள், 89,855 மிகச்சிறு பாலங்கள் என 98,184 பாலங்கள் உள்ளன என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் சுமார் 3,357 பாலங்கள் சீரமைப்பு செய்ய வேண்டிய நிலையிலும் சில இடங்களில் புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. மேலும், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக தமிழகத்தில் பல்வேறு கிராமங்களும், நகரங்களும் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ள இயலாது துண்டிக்கப்பட்டு மக்கள் அவதியுற்றதைத் தொடர்ந்து நகர்ப்புற வீட்டு வசதி மேம்பாடு நிறுவனம் (HUDCO) மற்றும் தேசிய விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி வங்கி (NABARD) ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் ரூ.360 கோடி செலவில் 106 பெரிய பாலங்களின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2.1.1999இல் துவக்கி வைத்துள்ளார்கள். இப்பாலங்கள் யாவும் 2,000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதைப்போல் தற்போது ரூ.95.44 கோடி செலவில் 102 புதிய பாலங்கள் கட்டுவதற்காக திட்டமிட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் செயல்படுத்த மாநில அரசு ஆணையையும் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலைகளில் 67 பாலங்கள் அமைக்க, ரூ.59.85 கோடியும், ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 32 பாலங்கள் அமைக்க ரூ.28.54 கோடியும், சென்னை நகரை நோக்கி வரும் "ஆரச்" சாலைகளில் 3 பாலங்கள் அமைக்க ரூ. 7.12 கோடியும், ஆக மொத்தம் 102 பாலங்கள் அமைக்க ரூ.95.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த 102 பாலங்களும் ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு டிசம்பர், 1999இல் இருந்து ஏப்ரல் 2001க்குள் கட்டி முடிக்கப்படும்.

**கிராமச் சாலைகள்**

தமிழகத்தில் விவசாயத்தையே பெருமளவு தொழிலாகக் கொண்ட கிராம மக்கள் தங்கள் விளைப் பொருட்களை நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகளை தார்ச் சாலையாக மாற்ற முடிவெடுத்து இதற்கென "கிராமப்புறச் சாலைத் திட்டம்" என்ற தனி அலகினை உருவாக்கி தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1.7.1972இல் ஆணையிட்டார். இத்திட்டத்தின்படி 1,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமச் சாலைகள் யாவும் தார்ச்சாலையாக அமைக்கப்படும் திட்டத்தை நாட்டிலேயே முன்னோடியாக கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 1500க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்கள் 3,672, 1,000–1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் 2,568 ஆகும்.

1972ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 1990ஆண்டு முடிவுற்ற 7–வது ஐந்தாண்டு திட்டத்தில் 1,500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட 2,568 கிராமங்கள் தார்ச்சாலை வசதியுடன் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தி அரசு சாலைகளுடன் இணைக்கப்பட்டன. படிப்படியாக இந்த இணைப்புச் சாலைகளும், அரசுச் சாலைகளாக மாற்றப்பட்டு அரசின் பராமரிப்பில் இருந்து வருகின்றன.

4ஆவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 1996ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தார்ச் சாலை இணைப்பு பெறாத கிராமங்கள் 517 என கண்டறியப்பட்டன. அவைகளில்

1500க்கு மேல் மக்கள் தொகை உள்ள 140 கிராமங் களும், 1,000–1,500 மக்கள் உள்ள 377 கிராமங்கள் அடங்கும்.

இவையாவும் இந்த நிதியாண்டிற்குள்ளேயே தார் சாலையினால் இணைத்திட அரசு அனுமதி அளித்து பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

1997–98 ஆம் ஆண்டில் 216 கிராமங்களில் ரூ.83.49 கோடி செலவில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

1998–99ஆம் ஆண்டில் 301 கிராமங்களில் தார்ச்சாலை அமைக்கும் பணிகள் ரூ.101.73 செலவில் தொடங்கப்பட உள்ளன.

மேலே குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு மார்ச் 99க்குள் 1991ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டின்படி 1,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்து கிராமங்களும் தார்ச் சாலையினால் இணைக்கப்பட்டுவிடும்.

மேலும், தமிழக முதலமைச்சர் அவர்கள் 1998–99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை கொண்ட 4,986 கிராமங்களுக்கும் படிப்படியாக தார்ச்சாலை இணைப்பு வழங்கப்படும் என அறிவித்தார்கள். மேற்படி அறிவிப்பினை செயல்படுத்த இந்த ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவியுடன் 373 தார்ச்சாலைகள் ரூ.123.70 கோடி செலவில் 340 கிராமங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் தேசிய விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி வங்கியின் (NABARD) நிதியுதவியுடன் செயல்படுத்தப் படவுள்ளன.

இவைத்தவிர அரசு சாலைகளான 28 இதர மாவட்டச் சாலைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிறுவனத்தின் உதவியுடன் ரூ.15.86 கோடி செலவில் 184 கி.மீ. நீளத்திற்கு மேம்படுத்தவும் அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

போக்குவரத்து செரிவு மிகுந்த சென்னை மற்றும் புறநகர் சாலைகள் போதிய அகலமும் வலிவும் இல்லாததால் வாகனப்போக்குவரத்து பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றது. இதனால் கால விரயமும் எரிபொருள் செலவினமும் மிக அதிகமாகின்றன. இந்நிலை தொடர்ந்தால் சென்னையிலும், சுற்றுப் பகுதிகளிலும் போக்குவரத்து தேக்கமும் அதன் தொடர்ச்சியாக பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படலாம் என அஞ்சப்படுவதால் அதனைக் களைந்திட தொலை நோக்குடன் முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் சென்னை நகரை நோக்கி சுமார் 50 கி.மீ. சுற்றளவில் வரும் ஆரச்சாலைகளை அகலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரை நோக்கி வரும் "ஆரச்" சாலைகளின் மொத்த நீளம் 251.60 கி.மீ. என கண்டறியப்பட்டு, நகர்ப்புற வீட்டு வசதி மேம்பாடு நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.213 கோடி செலவில் மேம்படுத்த மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் அனைத்தும் 2,000ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ★



*102 பாலங்களின் கட்டுமானப் பணிகள், சென்னை மாநகரின் 212 கி.மீ. நீள ஆரச்சாலைகள் மற்றும் 373 கிராமச்சாலைகளின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 14.2.99 அன்று வண்டலூரில் தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நான்கு பாலங்களை தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக்குழுத் தலைவர் திரு. **முரசொலிமாறன்** எம்.பி., அவர்கள் திறந்து வைத்தார். விழாவிற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. **தா. கிருட்டிணன்** தலைமை வகித்தார். விழாவில் அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.* ●

# சாதிகளிடையே மோதிக்கொள்ளும் கொடியநிலை நீங்க வேண்டும்.

## – முதலமைச்சர் கலைஞர்

"இராசிங்காபுரம், ஒடைப்பட்டி ஆகிய இரு இடங்களில் சமத்துவபுர வீடுகளை திறந்துவைக்கவும், அரசின் சமுதாய நலத்திட்டங்கள் பலவற்றை வழங்கிடவும் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை நான் இங்கு பெற்றிருக்கிறேன்.

தமிழகம் முழுவதும் உருவாக்குவதென்று ஏறத்தாழ அதற்காக 40 கோடி ரூபாய் அரசின் சாரிபிலே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலே 12 சமத்துவபுரங்கள் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றன. இன்றைக்கு இராசிங்காபுரத்திலும், ஓடைப்பட்டியிலும் திறந்துவைக்கப்படும் சமத்துவபுரங்கள் 13ஆவது, 14ஆவது சமத்துவபுரங்கள் ஆகும்.

எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மிகுந்த ஆர்வத்தோடு இதுவரையிலே இந்த 12 சமத்துவ புரங்களைக் கட்டி முடித்து என்னை அழைத்து திறப்புவிழா நடத்தியிருக்கிறார்கள் என்றாலுங்கூட அந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எல்லாம் அரசினுடைய கடமையை ஒரு அதிகாரி என்ற முறையிலே இணைந்து செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தோடு, ஆர்வத்தோடு அந்த சமத்துவபுரங்களை கட்டி முடித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே நம்முடைய பஷீர் அகமதுவைப் பொறுத்தவரையில், இந்தச் சமத்துவபுரத் திட்டத்தில் 'இன்வால்வ்மென்ட்' என்பார்களே ஆங்கிலத்திலே, அதைப்போல தன்னையே அதில் ஆட்படுத்திக் கொண்டு, தன்னையே அதில் இணைத்துக் கொண்டு இந்தப் பணிகளை ஆற்றியிருக்கின்றார் என்பதை நான் இங்கே கண்டு பூரித்துப் போகிறேன்.



இன்று இராசிங்காபுரத்திலும், ஒடைப்பட்டியிலும் திறந்துவைக்கப்பட்டுள்ள இரண்டு சமத்துவபுரங்களை நான் காணும்போது அங்கே எப்படியெல்லாம் இந்தப் பணிகளை ஆற்றி முடித்திருக்கிறோம் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் பஷீர் அகமது ஐ.ஏ.எஸ். அவர்கள் என்னிடம் விளக்கியபோது மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன்.

1997–98, 1998–99 ஆகிய இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக இதுபோன்ற 100 சமத்துவபுரங்களைத்

தார்ச் சாலை போடப்படுகிறது. ஒரு ஐம்பது கிலோ மீட்டர் தூரம் வரை தார்ச் சாலை போடப்படுகிறது. கருப்பு திறமான தார்ச் சாலையில் சாதிச் சண்டைகளின் காரணமாக ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு அங்கே சிவப்பு நிறமும் சிந்தப்படுமேயானால் எப்படி தார்ச் சாலை போட முடியும்? எப்படி அதை நாம் சகித்துக் கொள்ள முடியும்?

இதை எல்லாம் எண்ணித்தான் சாதி, மதம் இவைகளை எல்லாம் ஒரு நல்லிணக்க வட்டத்திற்

குள்ளே கொண்டு வரவேண்டும் என்கின்ற அந்தக் கருத்தோடுதான் எண்ணி எண்ணிப் பார்த்து இந்த சமத்துவபுரம் திட்டத்தை கடந்த ஆண்டு வகுத்து அளித்தேன்.

### இராசிங்காபுரம் குடியிருப்பில் 40 பேர் ஆதிதிராவிடர்கள்

இராசிங்காபுரத்தில் அமைந்துள்ள இந்த குடியிருப்புக்களில் 40 பேர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்த இடத்திற்குள்ளே பல பிரிவுகள் இருக்கின்றன. அருந்ததியர் என்றும், பொதரை வண்ணார் என்றும், வள்ளுவர் என்றும், பி.ஆர்.பி.எல். என்றெல்லாம் பல பிரிவுகள் இருக்கின்றன. இந்த எல்லாப் பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 40 பேர் இந்த நூறு வீடுகளிலே இராசிங்காபுரத்திலே வசிக்க தலைப்பட்டு இருக்கிறார்கள். பிரமலைக் கள்ளர் 9 பேர், குரும்பர் 8 பேர், சோளியன் செட்டியார் 2 பேர், கவுடர் ஒருவர், குலாளர் ஒருவர், மருத்துவர் ஒருவர், இத்தகைய மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 22 பேர்.

வக்களிகர் 7 பேர், மறவர் 5 பேர், தோளாங்கர் 4 பேர், கம்மாளர் 3 பேர், துளுவ வேளாளர் 3, முஸ்லீம் லப்பை 2, சாதிச்செட்டி 2, தெலுங்கு செட்டியார் ஒருவர்,

இதைப்போலத்தான் ஓடைப்பட்டியில் சமத்துவபுர குடியிருப்பில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 40 பேர். அதிலே அருந்ததியர் மாத்திரம் 20 பேர். மற்றவர்கள் 20 பேர். மொத்தம் 40 பேர். அம்பலக் காரர்கள் 5 பேர், குரும்பர் 5 பேர், சலவைத் தொழிலாளி 5 பேர், மறவர் 2 பேர், இசைவேளாளர் ஒருவர். பண்டாரம் ஒருவர், நாவிதர் மூன்று பேர். பிரமலைக்கள்ளர் ஒருவர். ஆக மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 23 பேர்.

வக்களிகர் 13, நாடார் 4, முஸ்லீம் லப்பை 3, வடுகர் 2, அனுப்ப கவுண்டர் ஒருவர். வெள்ளாளச் செட்டியார் ஒருவர், இல்லத்து பிள்ளைமார் ஒருவர், கிறித்துவ பறையர் ஒருவர், துளுவ வேளாளர் ஒருவர் – ஆக பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 27 பேர். இங்கேயும் பிராமணர்கள் 7 பேர், கன்னடிய ஐயர் ஒருவர், சைவ வேளாளர் ஒருவர், சைவப் பிள்ளை ஒருவர், ஆக மொத்தம் 100 பேர் ஓடைப்பட்டியிலே வாழப்போகிறார்கள்.

இன்றைய தினம் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வாழ விருப்பம் தெரிவித்து வாழத் தொடங்குகிறார்கள். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதில் என்ன தவறு. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



கிறிஸ்துவ வேளாளர் ஒருவர் – ஆக பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 28 பேர். இதுதவிர பிராமணர்கள் 7 பேர், வெள்ளாளர் 3 பேர், இந்த முன்னேறிய இனத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர். இதில் இருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்?

பிராமணர்களில் இருந்து ஆதிதிராவிடர்கள் வரை அத்தனைப்பேரும் இந்த நூறு வீடுகளிலே ஒன்றாக வாழப்போகிறார்கள்.

இங்கே பேசினார்களே "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் பாடியதை. "இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதை. "எம்மதமும் சம்மதமே" என்று உத்தமர் காந்தியடிகள் உரைத்ததை இங்கே கூறினார்களே, இவைகளை யெல்லாம் லேசாக மறந்துவிட்டு அவர்களுடைய படங்களுக்கு, சிலைகளுக்கு மாலை அணிவித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு நமக்கு தகுதி இருக்கின்றதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு – மூட்டை கட்டி வைத்தாலும் பரவா யில்லை. யாராவது அவிழ்த்து எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மூட்டை கட்டி ஆற்றிலோ, குளத்திலோ தூக்கி எறிந்துவிட்டு பிறகு ஆண்டுதோறும் அவர்களுடைய படங்களுக்கு மாலை அணிவிப்பது என்றால் என்ன பொருள், யாரை ஏமாற்றுகின்றார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



இதை எல்லாம் சிந்தித்துத்தான் இந்த சமத்துவ புரமாவது வழி காட்டாதா – தமிழகத்தை சமத்துவபுரமாக ஆக்க வழி காட்டாதா – ஏன் இந்தியாவையே சமத்துவபுரமாக ஆக்க வழிகாட்டாதா என்கின்ற என்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியும் என்கின்ற நம்பிக்கையோடு – உங்களுடைய ஒத்துழைப்பும் இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நான் இந்தப் பணியிலே அரசின் சார்பில் ஈடுபட்டிருக்கின்றேன்.

நம்முடைய விழாத் தலைவர் அவர்கள் இங்கே டில்லியிலிருந்து வெளிவருகின்ற ஆங்கில ஏட்டின் சில கருத்துக்களை எடுத்துக் காட்டினார்கள்.

சமத்துவபுரத்திற்கு ஆதரவாக – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஆதரவாக–நமக்கு நாமே திட்டத்திற்கு ஆதரவாக 'எகனாமிக் டைம்ஸ்' ஏடு எழுதியுள்ள அந்த ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பை – அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே கல்கத்தாவில் இருந்து வெளிவருகின்ற 'ஸ்டேட்ஸ்மேன்' என்ற பத்திரிகை **13.10.98** அன்று இந்த சமத்துவபுரம் திட்டத்தை பற்றி எழுதியுள்ளது.

அதாவது ''திராவிட இயக்கம் சமூக நீதி மேம்பாட்டிற்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டு உள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் எழுச்சி பெறவும், பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காணவும், திராவிட இயக்கம் முக்கியப் பங்கு ஆற்றி உள்ளது. (இங்கேதான் அவர்கள் எச்சரிக்கிறார்கள்) சாதி அடிப்படையிலான கட்சிகள், தனித்துவிடப்பட்டால் சாதி மோதல்கள் குறைந்துவிடும் என்று'' கல்கத்தாவில் இருந்து வெளிவருகின்ற 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகை நம்முடைய சமத்துவபுரம் திட்டத்தை பாராட்டுகின்ற நேரத்தில் வெளிப்படுத்துகின்ற கருத்து – அறிவுரையாகும்.

சாதிச் சண்டைகள் என்றால் நான் கேட்கிறேன். நீங்களே எண்ணி பாருங்கள். ஒரு ஊரிலே இருக்கின்ற ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் இன்னொரு ஊரிலே இருக்கின்ற இன்னொரு சாதியைச் சேர்ந்தவர்களோடு இன்றைக்கு மோதப் போகிறோம் என்று அந்த சாதியிலே இருக்கின்ற ஆயிரம் பேரும் அறிவித்து விட்டு அதைப்போல இன்னொரு சாதியிலே இருக்கின்ற ஆயிரம் பேரும் அறிவித்துவிட்டு மோதிக் கொள்கிறார்களா என்றால் இல்லை.

இங்கே இருக்கிற சாதியை வைத்து தான் பிழைக்க முடியுமா, தான் உயர முடியுமா, தான் செல்வாக்குப் பெற முடியுமா, தான் சுரண்ட முடியுமா, தான் சுருட்ட முடியுமா என்று எண்ணுகின்ற ஒருவர் அந்த சாதியிலே உள்ள மக்களைத் தூண்டிவிட்டு உங்களுக்காக நான் உயிர் கொடுப்பேன் என்று சொல்வதும், அதைப்போல அந்த சாதியிலே இருக்கின்ற இன்னொருவர் அவர் அந்த மக்களைத் தூண்டிவிட்டு நான் உங்களுக்காக உயிர் கொடுப்பேன் என்று சொல்வதும் இந்த இரண்டு சாதிகளும் மோதிக் கொள்ளும்போது அந்த இரண்டு தலைவர்களுமே ஊரிலே இல்லாமல் வேறு எங்கேயோ ஓடி ஒளிவதும், தூண்டி விடப்பட்ட மக்கள் இரத்தம் சிந்துவதும் தான் இன்று நாட்டிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அதைப் பார்த்து நான் தினம் தினம் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கின்றேன்.

இந்த கொடிய நிலை நீங்கவேண்டும் என்பதற்காக என்னால் முடிந்த ஒரு சிறிய செயல்தான் சமத்துவபுரம் அமைப்பது. இந்த அமைப்புகள் மேலும் மேலும் வளர வேண்டும். அமைப்புகள் வளர்ந்தால் போதாது, அந்த உணர்வுகள் மேலும் மேலும் வளரவும், பெருகவும் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை.

*– தேனி மாவட்டம், இராசிங்காபுரம், ஓடைப்பட்டியில் சமத்துவபுரங்களை* ***5–2–99*** *அன்று திறந்து வைத்து முதலமைச்சர்* ***கலைஞர்*** *அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து....*

# முல்லைப்பாட்டு

சங்க இலக்கிய நூல்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படுவது பத்துப்பாட்டு. அப்பத்து பாட்டினுள் ஐந்தாவதாக இடம் பெற்றிருப்பது முல்லைப்பாட்டு.

*'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை*
*பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய*
*கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்*
*பாலை கடாத்தொடும் பத்து'.*

– என்ற பழைய வெண்பாவின் மூலம் தெரிவதோடு அப்பத்துப் பாட்டுக்கள் எவை என்றும் உணரலாம்.

இம்முல்லைப் பாட்டுக்குப் பாடிய நப்பூதனார் என்றும் நல்லிசைப் புலவராவார். இவர் சோழ நாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பொன் வாணிகம் செய்து வந்தனர். இதனால் இவரை 'காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்' என வழங்கப்படுவதாயிற்று.

இப்புலவர் பெருமான் முல்லைப் பாட்டைத் தவிர வேறு பாடல் பாடியிருப்பதாகப் பண்டைய இலக்கியங்களில் காணப்படவில்லை. நற்றினை 29ஆம் செய்யுளைப் பாடியப் புலவர் பூதனார் என்றிருப்பதால் இவர்தானா அவர் அல்லது வேறொருவரா? என்பது ஐயப்பாடாக உள்ளது.

பத்துப் பாட்டுகளில் அடிகளில் குறைந்தது முல்லைப்பட்டு. நூற்றி மூன்று அடிகளையுடையது என்றாலும் படிப்போர் உள்ளத்தில் இன்பம் விளைப்பதோடு புலவர்தம் சொல்லோவியங்கள் மனத்தின்கண் அழியாத ஓவியங்களாக நிலைபெறுகின்றன.

'ஐந்திணை என்பது அன்புடைக் காமம்' என்று நம்பி அகப்பொருள் கூறுகிறது. ஐந்திணை என்பது குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம்.

இம்முல்லைப்பாட்டு இருத்தலும் அதன் நிமித்தங்களுமாகிய ஒழுக்கத்தினை கூறும் பாட்டாகும். அகப்பொருள் நெறியில் முல்லைத் திணைக்குரிய தெய்வம், பெரும்பொழுது சிறுபொழுது அந்நிலத்தில் வாழ்கின்ற மக்கள், அவர்தம் செய்தொழில் ஆகியவற்றைப் பாட்டின் தொடக்கத்தில் ஒரு சில வரிகளில் அமைத்திருக்கும் அருமை எண்ணி மகிழத்தக்கதாகும்.

இனி, பாட்டின்கண் வருகின்ற ஓவியங்களும் அவற்றின் நயங்களும் காண்போம் :

காதல் ஒருமித்த தலைவனும் தலைவியும் கூடி மணம் புரிந்து இல்லறத்தில் ஈடுபட்டு இன்புற்று மகிழ்ந்து வருகின்றனர். தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான். பொருளீட்டவோ, பரத்தையர் பால் காதல்கொண்டோ அவன் பிரிந்துச் செல்லவில்லை. பின் எதற்காகச் செல்கிறான். பகைவன்மேல் போர் தொடுக்க! ஆம், தலைவிக்கு மட்டும் அவன் தலைவன் அல்லன்; நாட்டுமக்களுக்கும் அவன் தலைவன். மணிமுடி தாங்கிய மன்னன்.

போர்க்கோலம் பூண்டு வந்து நின்ற தலைவனைக் கண்டு கலங்கி நின்றாள் தலைவி.

'சென்று வருக, வென்று வருக!' என்று வாழ்த்தி வழியனுப்ப வேண்டிய நீயா இப்படிக் கலங்கி நிற்பது?" தலைவன் கேட்டான்.


வாழ்த்தவும் வழியனுப்பவும் நான் தயங்கவில்லை. வென்று வருவீர்கள் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. ஆனால்...?"

"ஆனால்... ஏன் நிறுத்தி விட்டாய்?"

"சென்று வரும்வரை பிரிந்திருக்க வேண்டுமே...!" அதற்குமேல் வார்த்தை வரவில்லை; அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"இப்போது முதுவேனிற் காலம். இதுதான் படை நடத்திச் செல்வதற்கு ஏற்ற காலம். மேலும் போரைத் தவிர்க்க முடியாத நிலைமை, வினை முடித்துக் கார்காலத்

தொடக்கத்தில் வந்துவிடுவேன். அதுவரையில் நீ ஆற்றியிருக்க வேண்டியது உன் கடமை அல்லவா?" என்று பலவாறு ஆறுதல் கூறி விடை பெற்றுச் சென்றான்.



'ஒருநாள் எழுநாள் போல் செல்லும் சேண்சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.'

– என்ற வள்ளுவர் வாக்கின்படி நீண்ட முதுவேனிற் பருவத்தை எப்படியோ கழித்துவிட்டாள் தலைவி.

தலைவன் கூறிச்சென்ற கார்காலத் தொடக்கமாகிய ஆவணித் திங்கள் முதல் நாள் வந்தது.

கணவன் கட்டளையைக் கடமையாக ஏற்றுக் கொண்டு இத்துணை நாள்கள் ஆற்றியிருந்த தலைவி அவன் கூறிச் சென்ற கார்காலத் தொடக்க நாள் வந்ததும் வழிமேல் விழிவைத்து எதிர் நோக்கினாள்.

'காலை வாராதாயினும் மாலைக் காண்குவம்' என்ற நம்பிக்கை அவளது உயிரைத் தாங்கி நின்றது. என்றாலும் உள்ளத்தில் ஏக்கம் பிறக்காமல் இல்லை.

காலைப்பொழுது உச்சிப்போதாகி மாலைப் பொழுதும் வந்தது. பிரிவால் ஆற்றியிருப்போருக்கு உருமாறும் நோயை வள்ளுவரும்,

*'காலை அரும்பிப் பகல்லெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்'*

– எனக் கூறி போந்தார்.

தலைவன் சொன்ன சொல் தவறாதவன். குறித்த காலத்தில் தன் ஆருயிர் தலைவனைக் காணாததால் தலைவியின் உள்ளத்தில் துயரம் குடிக்கொண்டது. ஏக்கமும், அச்சமும் அவள் முகத்தில் நிழலாடின. கண்ணீர் கண்களில் தேங்கி நின்றது. முல்லைப் பாட்டின் தொடக்கமே இதுதான்.

அந்தி மாலை உலகத்தையே வளைத்துக் கொள்வதுபோல் வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்தன.

பெருமழை பெய்து சற்று ஓய்ந்தது. அந்த நேரத்தில் தலைவி படுகின்ற துன்பத்தைக் கண்ட பெருமுது பெண்டிர் ஊர்ப் புறத்தே சென்றனர். தலைவன் வரவில்லை என்றால் தலைவி இறந்துபடுவாளே என்ற அச்சம் அவர்தம் உள்ளத்தில் சூழ்ந்தது. செருகளம் நோக்கி சென்றவனாயிற்றே! வெற்றியோ! தோல்வியோ? தலைவன் உயிருக்கு ஏதும் விளைந்ததோ என்னவோ? என்ற ஐயமும் அச்சமும் அவர்தம் உள்ளத்தை வருத்தின. எனவேதான் தலைவன் வருகையை எதிர்நோக்கி நன்மொழி கேட்க நெல்லையும் முல்லையும் தூவித் தெய்வத்தை வேண்டி நின்றனர்.

'இன்ன வடுகுவர் தாயர்' என்ற நன்மொழி அவர்தம் செவியில் விழுகிறது. தெய்வத்தைத் தொழுது நின்ற முதுபெண்டிர் நன்மொழி பிறந்த திசையில் தங்கள் பார்வையைத் திருப்பினர். அவர்கள் கண்ட அக்காட்சி :




அது ஒரு இடைச்சேரி. பன்னிற மணிகளை நிரல்பட கோத்தது போல தாம்புக் கயிற்றிலே பன்னிற ஆண் கன்றுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பாலுண்ணாமையால் வருந்தும் அக்கன்றுகள் சுற்றிச் சுழன்று நோக்குகின்றன. குளிராலே நடுங்கும் தனது தோளினை இரு கைகளால் சேர்த்துக் கட்டிக் கொண்டு நின்றிருந்த இடைமகள் ஒருத்தி அக்கன்றுகள் படும் துயரினை கண்டு அவற்றிற்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். இந்த அருமையான ஓவியத்தைப் புலவர் தரும் சொல்லோவியத்தில் காண்போம்.

*‘சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்*
*நடுங்குசுவ லசைத்த கையள கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர*
*இன்னே வருகுவர் தாயர் என்போள்’*

நன்மொழி கேட்ட பெருமுது பெண்டிர் அகமகிழ்வோடு அரண்மனை திரும்பினர். பொன்னாலும் மணியாலும் அமைக்கப்பட்ட ஏழடுக்கு மாளிகையில் – அந்தப்புரத்தில் கலங்கிய கண்களோடு தலைவன் வருகையை எதிர்நோக்கி இருக்கும் தலைவியிடம் தாங்கள் கேட்ட நன்மொழியைக் கூறினர். ‘நன்மை தரக்கூடிய நன்மொழியை நாங்கள் கேட்டோம். பகைவரை வென்று அவர்பால் பெற்ற திறைபொருளோடு வினை முடித்து நின் தலைவர் வருவது உறுதி. நீ உன் மனத் தடுமாற்றத்தால் ஏற்பட்ட வருத்தம் போக்கிக் கொள்’ எனப் பலவாறு தேற்றினர்.

பாலுண்ணாமையால் வருந்தும் ஆன்கன்றிகள்பால் அன்பு கொண்ட ஆய்மகள் அவற்றைத் தேற்றுவதைப் போல தன் தலைவன் வரவு காணாது கலங்கும் தலைவியின்பால் பேரன்பு கொண்ட பெருமுது பெண்டிர் அவளைத் தேற்றுவதாக அமைத் திருக்கும் உவமைநயம் உள்ளத்தால் நினைக்கும் அளவுக்கு இன்பம் பயப்பதாகும்.

பெருமுது பெண்டிரின் தேறுதல் மொழி பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவியின் செவி ஏற்றாலும் உள்ளம் ஏற்கவில்லை. அதனால் பூப்போன்ற மையுண்ட அவள் கண்கள் முத்து முத்தாகக் கண்ணீர் சிந்தின.

‘பூப்போன்ற உன்கண் புலம்பு முத்துறைப்ப’ எனவரும் அடியோடு நிறுத்தி தலைவியின் கண்ணீருக்குக் காரணமான தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனின் நிலையையும், முல்லைத் திணையோடு பொருந்திய வஞ்சித்திணை என்னும் புறப்பொருள் பகுதிச் சேர்ந்த பாசறை இருப்பினை இடை பிறவரலாக இணைத்துக் கூறிய திறம் போற்றுதற்குரியதாம். மேலும்,

தலைவனது, பாசறை இருப்பினைக் கூறப்புகுந்த புலவர் நப்பூதனார், நம்மை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு சென்று ஒரு காட்டிடத்தே நிறுத்தி பாசறையைக் காணச் செய்யும் திறன் வியப்புக்குரியதாகும்.

பகைபுலத்த மண்ணில் நால்வகை அரண்களில் ஒன்றாகிட காட்டரண், காட்டாறுகள் சூழ்ந்தோடும் கொடிய காடு. பிடவமும், புதர்களும் நிறைந்திருக்கும் காடு. அத்தகைய காட்டில் பாசறை அமைக்கப் புகுந்த தலைவன், முதலில் வேட்டுவர்களை வென்று அவர்தம் அரண்களை அழித்தான். பிடவமும், புதர்களையும் வெட்டி எறிந்து, நாற்புறமும் முள்வேலியால் மதில் அமைத்தான் அந்தப் பாசறையில் வரிசை வரிசையாகப் படைஏர்க்குக் குடில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

குடில்களனைத்தும் தழையாலே வேயப்பட்டி ருக்கின்றன. நற்சந்தியிலே காவலாக நிறுத்தப்பட்டி ருக்கின்றன களிற்று யானைகள். அவற்றின் முன்னே கரும்பும், நெல்லும், அதிமதுரத் தழையும் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.



மதங்கொண்ட யானைகள் அவற்றைத் தின்னவில்லை. அவற்றாலே வண்டுகள் மொய்க்கும் நெற்றியைத் துடைத்துக் கொண்டும் கூரிய மரும்பின்மேல் தம் கையைப் போட்டுக் கொண்டும் நிற்கின்றன.

அவற்றின் பக்கத்தில் நின்றி ருக்கும் யானைப்பாகர்கள் கவளம் உண்ணும்படி யானைகளை அதட்டியும், ஆது, ஆது, அப்புது, அப்புது என சில வடமொழிச் சொற்களைப் பலமுறை உறக்கச் சொல்லியும் குத்துக் கோலாலே அவற்றைக் குத்திக் கொண்டும் இருக்கின்றனர்.

தவவேடம் பூண்ட அந்தணர் துகிலைக் காவிக் கல்லில் தோய்த்தெடுத்து முக்கோலை நட்டு அதன்மீது துகிலைக் காயவைப்பது போல படை வீரர்கள் வலிமை மிக்க வில்லை சேர ஊன்றி, அவற்றின் மீது துணிகளைத் தொங்கவிட்டு, கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டிய இருப்பிடத்தில் பூவேலை செய்யப்பட்ட குந்தக் கோல்களையும் ஊன்றி, தோற்பரிசைகளை நிரலாகப் பிணைத்துக் கட்டியிருக்கிறார்கள். இவ்வாறு அமைக்கப்பட்ட பல்வேறு படைஞர்களின் இருக்கைக்கு நடுவில் நெடிய குந்தக்கோலுடன் பல்வேறு கூறுபட்ட திறத்தினையுடைய மதிட்டிரையை வளைத்துக்கட்டி அதனகத்தில் அரசருக்குரிய இருக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. அரசரது இருக்கையில் பணிபுரியும் இளமங்கையர் கூந்தல் அசைய முதுகு அழகினைக் காட்டி வாளொடு கச்சினை வரிந்து கட்டிக்கொண்டு குறிய வளையல் அணிந்த கைகளில் நெய்யும் திரியும் ஏந்தி பாவைவிளக்கு அணையாதவாறு எரியூட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நடு யாமத்தில் உறக்கத்தையும் மறந்து ஒழுக்கத்தில் சிறந்த மெய் காப்பாளர்கள் மன்னனுக்குத் காவலாக நிற்கின்றனர்; நாழிகையை அளந்து கூறும் நாழிகைக் கணக்கர்கள் மன்னனைத் தொழுதவண்ணம் வாழ்த்திக்

கடந்த நாழிகையை அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

இயல்பாகவே வலிமை மிக்க உடலமைப்பும், குதிரை சம்மட்டியால் நெடுங்கக் கட்டின உடையும், அச்சம் தரக்கூடிய தோற்றமுள்ள யவன வீரர்களும் காவல் புரிகின்றனர். அழகிய மணிவிளக்கு எரியும் ஒப்பனை மிக்க அழகிய அறையினுள் உள்ளறையாகிய பள்ளியறையில் ஊமை மிலேச்சர் காவலாக மன்னன் அருகினில் இருக்கின்றனர்.



அந்தப் பள்ளியறையில் மன்னன் இருந்த நிலையை மிக அழகாகக் கூறுகிறார் நப்பூதனார்.

அன்பு மனைவியைப் பிரிந்து வந்தோமே! அவள் எப்படி ஆற்றியிருக்கிறாளோ! ஏக்கத்தால் அவள் மேனி வாடிப் போகுமே! என்று அவளைத் தழுவி இன்பம் காண்போம்! என்றெல்லாம் நினைத்துக் கொண்டா அவன் உறக்கத்தை இழந்தான்! அல்ல... அல்ல... பகைவர் மேல் கொண்ட போர் விருப்பத்தால் வெற்றி மாலை தழுவ வேண்டுமென்ற வேட்கையால் அவன் உறக்கத்தை இழந்தான். அதுமட்டுமல்ல, போர்க்களத்தில் பகைவர் எறிந்த வேல் பாய்ந்து புண்பட்டு தம்பிடி யானைகளை மறந்து துன்புறும் யானைகளை நினைத்துக் கொண்டான். அடிபட்ட பாம்பு துடிப்பது போல யானைகளின் பருத்த கைகளை வெட்டி வீழ்த்தி, வெற்றியைத் தேடித்தந்து விழுப்புண் ஏற்று உயிர் துறந்த மறவர்களை நினைத்துக் கொண்டான். கவசமாக அணியப்பட்ட தோற்பரிசையும் கிழித்துக் கொண்டு அம்புகள் தைத்திருப்பதால் புல்லைத் தின்னாமல் வருந்தி நிற்கும் குதிரைகளை நினைத்துக் கொண்டான். எப்படி வரும் தூக்கம்? உறக்கமிழந்த அவன் எப்படிப் படுத்திருந்தான்? ஒரு கையை படுக்கை மீதும், மற்றொரு கையால் தலையைத் தாங்கியும் படுத்திருந்தான்.



இப்படி ஒரு நாளா? இரண்டு நாளா? பல நாள்கள் கழிந்தன. வெற்றி மாதைத் தழுவத் துடிக்கும் அவன் தோள்கள் திணவெடுத்தன. வாளும் வில்லும் ஏந்தி செருகளம் நோக்கிச் சென்றான். வாள்வலியும், தோல் வலியும் கொண்ட அவன் பகைவரைச் சாய்த்தான். வாகை சூடினான். வெற்றி மாதைத் தழுவினான். பகை மன்னர் நடுங்கும்படி வெற்றி முரசு முழங்கியது, பாசறையில். அன்றிரவுதான் வெற்றிக் களிப்பில் இனிதாக உறங்கினான்.

இவ்வாறு பாசறையின் அமைப்பும், அப்பாசறையின் தலைவனிருந்த நிலைமையும் விளங்கக் காட்டிய புலவர் பெருந்தகை மீண்டும் நம்மை தலைவியின்பால் அழைத்துச் செல்கிறார்.

பூப்போன்ற மையுண்ட கண்கள் முத்து முத்தாகக் கண்ணீர் சிந்த தலைவன் பால் கொண்ட அன்பும் அவன் கூறிச் சென்ற கடமையும், அவள் உள்ளத்தில் போர் நிகழ்த்துகின்றன. கடமையை எண்ணி உள்ளத்தைத் தேற்றிக் கொள்கிறாள். துயரத்திலே உடல் மெலிந்து சுழலும் வளையலைத் திருத்திக் கொள்கிறாள். மீண்டும் மயங்குகிறாள். அம்பு தைத்த மயில்போல உடல் நடுங்கி அணிகலன்கள் நெகிழ்கின்றன. பொன்னாலும் மணியாலும் அமைக்கப்பட்ட ஏழடுக்கு மாளிகையில் பாவை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காற்றாலே அதன் சுடர் ஆடி அசைகிறது. பாவை உள்ளமும் ஆடி அசைகிறது. மழை பொழிந்து கொண்டிருக்கிறது. மாளிகையின் கூடல் வாயிலில் மழைநீர் அருவியாகத் திரண்டு விழுவதால் இனிய இசை எழும்புகிறது. ஆற்றியிருக்கக் கருதிய தலைவி அந்த இசையைத் செவி மடுத்துக் கேட்டு ஒருவாறு தன் துன்பத்தை மறந்து இருக்கிறாள். புலவர் தரும் சொல்லோவியம் காண்போம் :

*'நீடு நினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்*
*மையல் கொண்டு மொய்யென அயிர்த்தும்*
*ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழை நெகிழ்ந்து*
*பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல*
*இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து*
*முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி*
*இன்பலி மிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்*

இவ்வாறு இருந்த தலைவியின் நிலையை நீடிக்க விரும்பாத புலவர் பெருமான் 'அஞ்செவி நிறைய ஆலின' என்ற சிறு சொற்றொடராலே அவள் துன்பத்தைப் போக்கும் நயம் நினைத்து இன்புறத் தக்கதாகும்.

'எவை ஆலனா?' என்ற வினா நமக்குத்தான் எழுமே தவிர தலைவிக்கு எழாது. அப்படி எழுமானால்,

*'இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்*
*அஞ்செவி நிறைய ஆலின'*

என்று கூறியிருக்கமாட்டார். தலைவிக்குத் தெரியும் எவை ஆலின என்று தலைவன் படுகின்ற நெடுந்தேர் பூட்டிய குதிரைகள்தாம் ஆரவாரித்தன என்று அவள் அறிந்து கொண்டாள்.

தலைவன் எப்படி வருகிறான், எத்தகைய வழிகளைக் கடந்து வருகிறான் என்பதனை அறிய வேண்டாமா? அவற்றையும் கூறிப் பாட்டை முடிக்கிறார் புலவர்.

– பெருங்கவிஞர் **நெ. அ. பூபதி**



# பண்பாடு காப்பது : தமிழனின் தனி இலக்கணம்

**– முதலமைச்சர் கலைஞர்**

தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் இந்தத் தஞ்சையில் நவீனக் கலைக்கூடம் சிறப்புப் பூங்கா திறப்பு விழா நிகழ்ச்சியும் மற்றும் கலை வளாகத்திற்கான கால்கோள் விழா நிகழ்ச்சியும் நடைபெறுகிற நேரத்தில் உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக ஆக்குகின்ற வகையில் நம்முடைய புதுவை துணை நிலை ஆளுநர் ரஜினிராய் அவர்கள் தமிழிலேயே பேசியிருக்கிறார்.

அடுத்த முறை இந்த மகிழ்ச்சியை மும்மடங்காக ஆக்குகிற வகையில் நம்முடைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்களும், புதுவை ஆளுநரை வெல்லும் வகையில் தமிழில் பேசுவார் என்று நான் இன்றைக்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்பாட்டு மையத்தின் முக்கிய நோக்கங்களை யெல்லாம் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பது என்னுடைய அவா.

**தென்னகப் பண்பாட்டு மையத்தின் முக்கிய நோக்கங்கள்**

இந்தியப் பண்பாட்டைப் பேணிக் காப்பதும் அதனை வளர்ப்பதும் தென்னகப் பண்பாட்டு மையத்தின் முக்கியமான நோக்கமாகும். அதற்காக கிராமியக் கலைகளையும், ஆதிவாசிகளின் கலைகளையும் வளர்த்து அவைகளுக்குப் புத்துயிர் அளித்தல், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பளித்து, அவர்களது கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் – பயிற்சி அளித்தல்.

கலை நிகழ்ச்சிகளை அண்டை மாநிலங்களுக்கு ஏற்பாடு செய்து கலைஞர்களை அனுப்பி வைத்தும்,

அதைப் போலவே வேறு மாநிலங்களில் இருந்து கலைக்குழுக்களை வரவழைத்து இங்கு கலை நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தும் தேசிய ஒருமைப் பாட்டை வளர்த்தல்.

நலிந்து வரும் கலைகளை எதிர்காலத்தில் மறைந்துவிடாமல் பாதுகாத்தல், சிற்பக்கலை, ஓவியக் கலை ஆகியவற்றை வளர்க்க இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து அதற்கான முகாம்கள் நடத்துதல்.

கைவினைப் பொருள்கள் செய்யும் கைவினைஞர்களின் பொருள்கள் விற்பனை ஆகும் வகையில் இந்தியாவில் பல நகர்களிலும் கைவினைப் பொருட்காட்சி நடத்துதல் ஆகிய பணிகளை இந்த மையம் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.


தஞ்சையில் இருக்கும் இந்தப் பண்பாட்டு மையத்தைப் போலவே வேறு பல மையங்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலே இருக்கின்றன.

உள்ள பாண்டிச்சேரி, இலட்சத்தீவு, அந்தமான், நிக்கோபார் ஆகிய யூனியன் பிரதேசங்களும் இவைகளில் அடங்கும்.

இந்த மையத்திற்கு இதுவரை தனியாக கட்டிடம் ஏதும் இல்லாமல் இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் உள்ள பழைய திறந்தவெளி சிறைச் சாலைக் கட்டிடங்களில் இம்மையம் இயங்கி வருகிறது. இனிமேல்தான் சிறையிலிருந்து வெளிவர வேண்டும். அதற்கான முயற்சிதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**தென்னகப் பண்பாட்டு மையக்கட்டிடத்திற்கு 25 ஏக்கர் நிலம்**

சொந்தக் கட்டிடம் இதற்கு கட்டுவதற்காக 1996ஆம் ஆண்டு இந்த அரசு 25 ஏக்கர் நிலத்தை வழங்கியது. இந்தச் செய்தியை வரவேற்புரையில் இதன் இயக்குநர் சொன்னபோது யாரும் கையொலி செய்யவில்லை. 25



பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் ஒன்றும், உத்திரப்பிரதேசத்தில் அலகாபாத்தில் ஒன்றும், மாராட்டிய மாநிலத்தில் நாக்பூரில் ஒன்றும், இராஜஸ்தான் மாநிலத்தில் உதயப்பூரில் ஒன்றும், மேற்கு வங்க மாநிலத்தில் கல்கத்தாவில் ஒன்றும், நாகாலாந்து மாநிலம் திம்மாப்பூரில் ஒன்றுமாக இசையின் ஏழு சுரங்களைக் குறிக்கும் வகையில் மொத்தம் 7 இடங்களில் பண்பாட்டு மையங்கள் இந்த நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.

தென்னகப் பண்பாட்டு மையத்தின் உறுப்பு மாநிலங்களாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரம் ஆகியவைகளும், மத்திய அரசின் நேரடிப் பார்வையில்

ஏக்கர் நிலம் என்பது உங்களுக்கு அவ்வளவு சாதாரணமாக ஆகிவிட்டது என்று கருதுகிறேன்.

**கலைவளாகம் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு**

மேலும் இந்த வளாகத்தில் கலை வளாகம் அமைக்க 28–3–98 அன்று நம்முடைய மையத்தின் தலைவராக விளங்குகின்ற மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் வைத்த வேண்டுகோளின் படி இந்த அரசின் சார்பில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உடனடியாக ஒருகோடி ரூபாய் விடுவிக்கப் பட்டிருக்கிறது. மீதம் ஒரு கோடி ரூபாய் கட்டிடப்

பணிகள் தொடங்கிய பிறகு வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

**பழமை வாய்ந்த நவீன சிலைகள் -**
**சிற்பப் பூங்கா அமைப்பு**

தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையத்தில் ஐந்து பெரும் சிற்பிகளைக் கொண்டு செய்த ஐந்து பெரும்சிலைகளையும், பழமை வாய்ந்த நவீன சிலைகளையும் ஏறத்தாழ ஐந்து இலட்ச ரூபாய் செலவில் நிறுவும் சிற்பப் பூங்கா ஒன்றையும் அமைத்துள்ளது. அதன் திறப்பு விழாவும் இன்று நடைபெற்றிருக்கிறது.

ஏறத்தாழ 60க்கும் மேற்பட்ட ஓவியங்களைக் கொண்ட நவீன ஓவியக்கூடம் ஒன்றும் இந்த மையத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழாவும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது.

இந்தப் பண்பாடு, மனிதனுடைய உயிரைப்போல – உணர்வைப்போல, அவனுடைய உயிரோடு – உடலோடு ஒட்டியிருக்கக்கூடிய – ஒட்டியிருக்க வேண்டிய ஒன்று. அந்தப் பண்பாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இங்கே உரையாற்றிய நம்முடைய அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் விரிவாக இல்லா விட்டாலும் சுருக்கமாக விளக்கியிருக்கிறார்கள்.

பண்பாடு என்று சொல்லும்போதே – பண்பாடு ஒரு பெயர்ச்சொல்லாகவும் ஒலிக்கும். வினைச் சொல்லா கவும் ஒலிக்கும். பண்பாடு என்றால், பண்ணைப் பாடு – இசைபாடு என்று வினைச் சொல்லாகவும் ஒலிக்கும். இசையும், பண்பாடும் ஒன்றுதான். இசையில் எவ்வளவு இனிமையிருக்கிறதோ – எவ்வளவு சுகம் இருக்கிறதோ அதைப்போல பண்பாட்டினைப் போற்றிக் காப்பாற்றினால் அதிலும் சுகம் உண்டு. இன்பம் உண்டு.

தமிழர்களுடைய தனித்தன்மையே பண்பாடு போற்றுதல்தான். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், முரண்பாடுகள் இருந்தாலும், கருத்து மாச்சரியங்கள் இருந்தாலும்கூட, அவற்றுக்கிடையே பண்பாட்டைப் போற்றுதல் பண்பாட்டைக் காப்பாற்றுதல்தான் தமிழனின் தனி இலக்கணமாகும். திராவிட இனத்தினுடைய தனி இலக்கணமாகும்.

எனவே, இந்தியாவிலேயே தென்னகப் பண்பாட்டு மையம் இவ்வளவு சிறப்புற ஓங்கி வளர்ந்திருக்கிறது என்றுதான் சொல்வேன்.

பண்பாட்டிலே ஒன்று வாய்மை. வாய்மையோடு நடந்தால் அதுவே பண்பாடுதான். வள்ளுவர் வாய்மையைத் தான் அதிகமாக வலியுறுத்துவார். வாய்மையை வலியுறுத்தும் வள்ளுவரே கூட – பொய் சொல்லலாம் என்று கூறியிருக்கிறார். நான் இதைக் கூறும்போது உங்களுக்கு வியப்பாக இருக்கும். வள்ளுவரா பொய்கூட சொல்லலாம் என்கிறார் என்று! ஒரு குறளிலே வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

*"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்"*

என்கிறார். நன்மையைச் செய்யுமேயானால் – நாம் சொல்கிற பொய் ஒரு நன்மையைச் செய்யுமானால் அந்தப் பொய்கூட – வாய்மை என்ற இடத்திலே வைத்து கருதத்தக்க அளவிற்கு சிறந்தது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

உதாரணமாக ஒரு வேடன் ஒரு மானை வேட்டையாட துரத்தி வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். ஓடிக் களைத்த மான் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு முனிவருடைய குடிசைக்குள் நுழைவதாக வைத்துக் கொள்ளுங்கள். நிலைமையைப் புரிந்துகொண்ட அந்த முனிவர் அந்த மானைக் காப்பாற்றுவதற்காக வீட்டிற்குள் ஒளித்து வைத்து விட்டு உட்கார்ந்திருக்கிறார். வேடன் ஓடோடி வந்து, "இங்கே வந்த மான் எங்கே"? என்று கேட்கிறான். பொய்யே சொல்லக் கூடாது என்ற நிலையிலே உள்ள தவமுனிவர் வேடனைப் பார்த்து, "மானா, இங்கே வரவில்லையே" என்கிறார். முனிவர் பொய் சொல்வாரா என்ற நம்பிக்கையோடு வேடன் திரும்பி விடுகிறான். மான் காப்பாற்றப்படுகிறது.

முனிவர் சொன்னது பொய் என்ற போதிலும் அது வாய்மையின் இடத்திலே வைக்கப்படுகிறது.

*'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்"*

என்கிற வள்ளுவருடைய குறளுக்கேற்பத்தான் இந்த நிகழ்ச்சியை நான் குறிப்பிட்டேன்.

ஆனால் மானைப்போல ஒரு கொள்ளைக்கார கொடியவன் போலீசுக்குப் பயந்து அல்லது தண்டனைக்குப் பயந்து ஓடிவருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். வருகின்றவனை அதே முனிவர் காப்பாற்றி இங்கே கொள்ளைக்காரன் வரவில்லையே என்று கொள்ளைக்காரனைக் காப்பாற்ற முனிவர் முயன்றால், அது வாய்மை இடத்திலே வைக்கக்கூடிய ஒன்றாக இருக்காது என்பதையும் இந்தப் பண்பாட்டு மையத்திலே எனக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலமாக உங்களுக்கு விளக்க வேண்டிய விதத்திலே விளக்கி இந்த அளவிலே விடைபெறுகிறேன்.

*– தஞ்சாவூரில் 11.2.99 அன்று*
*நடைபெற்ற தென்னகப் பண்பாட்டு*
*மையக் கட்டிட கால்கோள் விழாவில்*
*முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை*

# சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள்

சென்னை மாநகரில் பீட்டர்ஸ் சாலை, கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்;




பீட்டர்ஸ் சாலை - வெஸ்ட்காட் சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; பாந்தியன் சாலை - காசா மேசர் சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; புரசைவாக்கம் நெடுஞ்சாலை - ஹண்டர்ஸ் சாலை சந்திப்பில் 12 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை - டி.டி.கே. சாலைச் சந்திப்பு 15 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; ஆழ்வார்பேட்டை - எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் 11 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; சர்தார் படேல் சாலை - லாட்டிஸ் பாலம் சாலைச் சந்திப்பில் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; சர்தார் படேல் சாலை - காந்தி மண்டபம் சாலைச் சந்திப்பில் 7 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும் என மொத்தம் 115 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 10 மேம்பாலங்களை சென்னை மாநகராட்சி அமைக்கின்றது.

மாநகராட்சி சார்பில் அமைக்கப்படும் இந்த 10 புதிய மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31-1-1999 அன்று பெரம்பூரில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார். விழாவிற்கு மேயர் திரு.மு.க. ஸ்டாலின் தலைமை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் முன்னிலை வகித்தார்.

விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறன், எம்.பி., மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு வீராசாமி, ஹட்கோ தலைவர் திரு.வி. சுரேஷ், மாநகராட்சி ஆணையர் திரு.பி.கோலப்பன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இது தவிர சென்னை மாநகரில் மேலும் 12 இடங்களில் மேம்பாலங்கள், பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

சேம்பியர்ஸ் சாலை - டர்ன் புல்ஸ் சாலைச் சந்திப்பு; உஸ்மான் சாலை - ஆர்காட் சாலைச் சந்திப்பு; எல்டாம்ஸ் சாலை - அண்ணா சாலைச் சந்திப்பு; வெங்கட நாராயண சாலை - அண்ணா சாலைச் சந்திப்பு; தங்கசாலைச் சந்திப்பு; கெல்லீஸ் சந்திப்பு; கொன்னூர் நெடுஞ்சாலை - மாதவரம் நெடுஞ்சாலைச் சந்திப்பு; சிமெண்ட்ரி சாலை - திருவெற்றியூர் நெடுஞ்சாலைச் சந்திப்பு; வள்ளுவர் கோட்டம் சந்திப்பு; ஜி.என்.செட்டி சாலை - திருமலைப்பிள்ளை சாலைச் சந்திப்பு; கிரீன்வேஸ் சாலை - துர்காபாய் தேஷ்முக் சாலை சந்திப்பு; ஆர்காட் சாலை - இன்னர் ரிங் சாலை (சுரங்கப்பாதை) ஆகிய 12 இடங்களில் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனைக்கு ஏற்ப முடிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், அதாவது இன்னும் இரண்டு மாதத்திற்கு உள்ளாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்று மேயர் விழாவில் அறிவித்தார். ★

# கலைஞர் அரசு
## திருவட்டார் சட்டமன்றத் தொகுதியில்
## ஆற்றும் அரும் பணிகள்

வெள்ளாங்கோடு ஊராட்சியில் 1997-98ஆம் ஆண்டு .அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.38 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.


1997-98ல் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.4.4 இலட்சத்தில் ஆவன்கோடு - உயர்நிலைப்பள்ளி மற்றும் காட்டாத்துறை - அரசு மேல்நிலைப்பள்ளி ஆக இரண்டு பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டப்பட்டன.

ரூ.75,000 செலவில் மருதன்கோடு ஊராட்சியில் படிப்பகக் கட்டடமும், ரூ. 1 இலட்சம் செலவில் பாகோடு ஊராட்சியில் குடிநீர் இணைப்பும், ரூ.2 இலட்சம் செலவில் பாகோடு ஊராட்சியில் 2 கிலோ மீட்டர் சாலை கருந்தளமும், ரூ. 2 இலட்சம் செலவில் அருமனை பேரூராட்சியில் சாலை கருந்தளமும் அமைக்கப்பட்டன.

ரூ. 2 இலட்சம் செலவில் ஆற்றூர் பேரூராட்சியில் புதியச் சாலை அமைக்கப்பட்டது.
ரூ. 2 இலட்சம் செலவில் வேர்க்கிளம்பி பேரூராட்சியிலும், ரூ.2 இலட்சம் செலவில் திருவட்டார் பேரூராட்சியிலும், ரூ.2 இலட்சம் செலவில் பொன்மனை பேரூராட்சியிலும் சாலைகள் அமைக்கப்பட்டன.

1998-99ல் செறுகோல் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்.

1998-99ல் ரூ.2.5 இலட்சம் செலவில் திருவரம்பு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டப்படுகிறது.
காட்டாத்துறை பேரூராட்சியில் ரூ. 2 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு இணைப்புச்சாலை அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் ஆற்றூர் பேரூராட்சியில் வடிகால் கட்டப்பட்டது.
ரூ.4.5 இலட்சம் செலவில் இரண்டு புதிய சாலைகளை அமைக்கப்பட்டது. திருவட்டார் பேரூராட்சியில் ரூ. 2 இலட்சம் செலவில் சாலைக் கருந்தளம் அமைக்கப்படுகிறது.
ரூ.2 இலட்சம் செலவில் காட்டாத்துறை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்படுகிறது.
ரூ.1.5 இலட்சம் செலவில் புதிய சாலை அமைக்கப்படுகிறது.
ரூ.2 இலட்சம் செலவில் குலசேகரம் பேரூராட்சியில் இணைப்புச்சாலை அமைக்கப்படுகிறது.
ரூ.2 இலட்சம் செலவில் பொன்மனை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது.



**வே. ஆல்பன்**
*சட்டப்பேரவை உறுப்பினர்*

ரூ.2 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு புதிய சாலை அமைக்கப்பட்டது. ரூ. 4 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் நடைபாலம் கட்டப்படுகிறது. ரூ.2 இலட்சம் செலவில் பேச்சிப்பாறை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.1.75 இலட்சம் செலவில் வாகோடு பேரூராட்சியில் நடைபாலம் (இணைப்பு) கட்டப்பட்டது. ரூ.1.75 இலட்சம் செலவில் அருமனை பேரூராட்சியில் இணைப்புப் பாலம் கட்டப்படுகிறது.

கலைஞர் அரசு எனது தொகுதியில் மேற்கொண்ட பணிகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிட்டுள்ளேன். இன்னும் பல திட்டங்கள் செயல்படுத்த இருக்கின்றன.

★ ★ ★

# மீனவர் நலன்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை 28 மீனவர் கிராமங்களுக்கு வீடு ஒன்று ரூ.32,000 செலவில் 994 வீடுகள் அரசு அனுமதி அளித்து, இதுவரை 815 வீடுகள் கட்டுமானப் பணி முடிவுற்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டில் 625 வீடுகள் 10 மீனவ கிராமங்களில் ஒரு வீடு ரூ.37,000 செலவில் அரசால் ஒப்பளிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**மீனவர்களுக்கு இலவச வீடுகள் பழுதுகள் நிவர்த்தி செய்தல்**

1996–97ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர் குடியிருப்புகள் பழுது பார்க்க வீடு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் ரூ.13.2 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 256 வீடுகளில் பழுதுகள் நீக்கும் பணி முடிவடைந்து உள்ளன.

**மீனவ கிராமங்களில் தெரு விளக்குகள்**

1996–97ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் 11 மீனவ கிராமங்களில் 58 தெரு விளக்குகள் ரூ.2,37,220 செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 1997–98ஆம் ஆண்டில் 29 மீனவ கிராமங்களில் 216 தெரு விளக்குகள் அமைக்க ரூ.9,11,245 அரசினால் ஒப்பளிப்பு பெறப்பட்டு தெரு விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1998–99ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் ஏழுதேசம் சின்னத்துறை, கோவளம், இரவிப்புத்தன்துறை, ராமன்துறை, வாணியக்குடி ஆகிய கிராமங்களில் 10 சோடியம் விளக்குகள் ரூ.1.10 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**இணைப்புச் சாலைகள்**

1996–97ஆம் ஆண்டு திட்டத்தில் மேலமுட்டம், சைமன்காலணி, கீழமணக்குடி ஆகிய 3 மீனவக் கிராமங்களில் 4.78 செலவில் 1.46 கி.மீ. இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**


1996–97ஆம் ஆண்டு 35,648 மீனவர்களுக்கு சேமிப்பு–நிவாரணத்தொகை ரூ.3,79,62,540 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

1997–98ஆம் ஆண்டு 32,333 மீனவர்களுக்கு ரூ.3,42,77,445 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டு மீனவர் சேமிப்பு நிவாரணத் தொகை ரூ.2,32,79,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்**

மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு விபத்தினாலோ அல்லது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது இறக்க நேரிட்டால் அவர் வாரிசுதாரர்களுக்கு அல்லது முழுமையாக ஊனமுற்றால் அவருக்கு ரூ.25,000 நிவாரணமும், பகுதி ஊனமடைந்தால் அவருக்கு ரூ.12,500 நிவாரணமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மத்திய அரசு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 25.3.1998 முதல் இத்திட்டத்தின் கீழ் ரூ.25,000க்கு பதிலாக ரூ.35,000 நிவாரணமும் பகுதி ஊனமுற்றால் ரூ.12,500க்கு பதிலாக ரூ.17,500ம் வழங்கப்பட்டு வருகிறது. 25.3.1998 முதல் தமிழ்நாடு அரசு மீனவர்களுக்கு புதிய மீனவர் விபத்துக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் மீனவர் விபத்தினால் மரணம் அடைந்தால் அவர் வாரிசுதாரர்களுக்கு ரூ.15,000ம் பகுதி ஊனம் அடைந்த மீனவர்களுக்கு ரூ.7,500 நிவாரணமும் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தினால் மீனவர்களுக்கு செலுத்தவேண்டிய காப்புறுதி பிரிமியம் தமிழ்நாடு அரசு செலுத்தி வருகிறது. 1996ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 62 நபர்களுக்கு 32.25 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மீனவர்களைப் போல மீனவ மகளிருக்கும் விபத்துக் குழு காப்புறுதி



திட்டத்தில் பயனடையும் வகையில் அரசு ஆணையிட்டுள்ளது.

**நைலான் வலைக்கு 50 சதவிகிதம் மானியம்**

50 சதவிகிதம் நைலான் வலை மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் அதிக பட்சமாக ரூ.6,000 வரை மானியம் வழங்கப்படும். பயனாளிகளிடமிருந்து சுமார் 1,352 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**10 சதவிகிதம் மானியத்தில் வலைகள் வழங்குதல்**

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில மீனவர் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்) மூலம் மீனவர்களுக்கு வலைகள் வாங்க 10 சதவிகிதம் மானியமாக ரூ.2,000 வரை வழங்க இதுவரை 34 பயனாளிகளுக்கு ரூ.57,315 வழங்கப் பட்டுள்ளது.

**மரைன் பிளைவுட் வள்ளம் (25 சதவிகித மானியம்)**

25 சதவிகித மானியத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.22,000 வரை வழங்க அனுமதிக்கப்பட்டு 127 பயனாளிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**மரைன் பிளைவுட் கட்டுமரம் (50 சதவிகித மானியம்)**

50 சதவிகித மானியத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.25,000 வழங்க மனுக்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

**வெளிப்பொருத்தும் இயந்திரம்**

வெளிப்பொருத்தம் இயந்திரங்களுக்கு 50 சதவிகித மானியம் அல்லது ரூ.10,000 இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. 1996–97ஆம் ஆண்டு 360 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.36 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டு 520 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.52 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டு 233 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு 50 சதவிகித மானியத்தில் ரூ.23.30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

1998–99ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் 5 மீனவர்களுக்கு கடலில் மீன் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்கும் கருவி 25 சதவிகித மானியத்தில் வாங்க ரூ.0.81 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 100 சதவிகித மானியத் திட்டத்தில் 3 சக்கர சைக்கிள் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தில் குளச்சல் மற்றும் கன்னியாகுமரி மீனவர் மகளிர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு 100 சதவிகித மானியத்தில் இரு ஆட்டோ டிரெயிலர் பெறப்பட்டுள்ளது. ஒரு ஆட்டோ டிரைலருக்கான மானியம் ரூ.1.25 இலட்சம்.

மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் அலுமினிய மீன்பாத்திரம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்ட மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1,000 மீன்பாத்திரங்கள் வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**மீன்பிடி விசைப் படகுகளுக்கு டீசல் மானியம்**

மீன்பிடி விசைப் படகுகளுக்கு டீசல் மானியமாக லிட்டருக்கு 35 பைசா வீதம் 1997–98ஆம் ஆண்டு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டிற்கு டீசல் மானியம் லிட்டருக்கு, 45 பைசாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

**வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு மண்ணெண்ணெய் டீசல் மானியம்**

இத்திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய், டீசல் மானியமாக லிட்டருக்கு 0.50 பைசா வீதம், மாதம் ரூ.125யும் வருடத்திற்கு ரூ.1500யும் வழங்கப்படுகிறது.

★ ★ ★

# குளச்சல் தொகுதி மேம்பாடு



**இரா. பெர்னார்டு**
*சட்டப்பேரவை உறுப்பினர், குளச்சல் தொகுதி
கன்னியாகுமரி மாவட்டம்*

தமிழகத்தின் தென் முனையாம் குமரியில் உலகப்பொதுமறை தந்த வள்ளுவனுக்கு சிலை எழுப்பும் இந்த பொன்னான தருணத்தில் மற்றைய மாநிலங்களுக்கு முன்னோடியாய் விளங்கும் சமத்துவபுரம் கண்ட சமூகநீதி காவலர் கலைஞரின் நல்லாட்சியில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினராய் இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.


தேர்தல் காலத்தில் எல்லோரையும் போலவே பல வாக்குறுதிகளை வழங்கி இருந்தாலும் கடந்த மூன்றாண்டுகளில் அவற்றில் பலவற்றை நிறைவேற்றியுள்ளேன். முக்கியமாக குளச்சலை துறைமுகமாக்க பலமுறை கோரிக்கை வைத்து வந்தேன். இது குறித்து சட்டசபையிலும் பலமுறை எடுத்து இயம்பி உள்ளேன். இதன் முதல் பயனாக தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞரின் சிங்கப்பூர் பயணத்தின் போது குளச்சல் துறைமுகம் குறித்து கொடுத்த பேட்டி எனக்கும் பொதுமக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியுடன் கூடிய நம்பிக்கையை தந்துள்ளது. நிச்சயம் இவ்வாட்சியிலே குளச்சல் துறைமுகம் அமையும் என பெரிதும் நம்புகிறேன்.

குளச்சலில் அரசு பேருந்து பணிமனை அமைத்திடவும், சேனவிளையில் அரசு ஆரம்ப சுகாதார மையம் அமைத்திடவும் ஆவன செய்துள்ளேன்.

ஆசாரி பள்ளத்தில் சுமார் 110 ஏக்கர் உள்ளடக்கிய காசநோய் மருத்துவமனை வளாகத்தில் மருத்துவ கல்லூரி அமைத்திட கலைஞரிடம் நேரிலும், சட்டமன்றத்தில் பலமுறை வேண்டுகோள் கொடுத்து வருகிறேன். எனது தொகுதி மக்கள் என்னை அவ்வப்போது சந்தித்து குறைகேட்க திங்கள் சந்தையில் ஒரு நிரந்தர அலுவலகம் அமைத்து செயல்படுகிறேன். எனது தொகுதியில் கடந்த மூன்றாண்டுகளில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், இந்திரா கூட்டுக் குடியிருப்புத் திட்டம், மாவட்ட பரவலாக்கப்பட்ட பண்முகப்படுத்தப்பட்டத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டப் பணிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் பலதரப்பட்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

எனது தொகுதியில் முடிந்த அளவு 100 சதவிகித குடிநீர் வசதியினை பெறுவதை நோக்கமாகக் கொண்டு, முட்டத்தில் 2 கிணறும் 2 நீர்த்தேக்கத் தொட்டியும், சைமன் காலணி, கோடிமுனை, குறும்பனை கிராமத்திற்கு தலா ஒரு குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 4.5 இலட்சம் செலவில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளை திங்கள் சந்தை, நெய்யூர், இராஜாக்கமங்கலம் துறை, பிள்ளைத்தோப்பு, எள்ளுவிளை ஆகிய இடங்களில் அமைக்கப்படுகின்றன.

இதுபோல 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளை பலவிதத் திட்டங்களின் மூலம் மனவிளை, கனியாகுளம், மாவிளை, பள்ளிச்சன் விளை, ஆலன்விளை, உன்னங்குளம், ரீத்தாபுரம், எரிசனாப்பள்ளி, கல்லுக்கூட்டம், தாராவிளை, பண்டாரத்தோப்பு, பெருவிளை ஆகிய இடங்களில் கட்டி தொகுதி மக்களுக்கு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சமத்துவபுரம் கண்ட சான்றோனாம் கலைஞர் ஆட்சியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.616 இலட்சம் செலவில் சுமார் 23.70 கி.மீ. நீள மேற்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குளச்சல் சட்டமன்ற தொகுதியில் பண்ணையூர் பாலம் ரூ.85.4 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது. சுமார் 63 கி.மீ. சாலைகளை கருந்தளம் அமைக்க நபார்டு உதவியுடன் ரூ.177 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் மா. சிங்காரவேலர் நினைவு இலவசக் குடியிருப்புத் திட்டத்தின் மூலம் 1996–97ஆம் ஆண்டில் முட்டம் – 30 வீடுகள், சின்னவிளை – 30 வீடுகள், குளச்சல் – 30 வீடுகள், வாணியக்குடி – 30 வீடுகள், சைமன் காலணி – 30 வீடுகள், மண்டைக்காடு புதூர் – 30 வீடுகள் ஆக மொத்தம் – 180 வீடுகளும்.



1997–98ஆம் ஆண்டில் கொட்டில்பாடு – 20 வீடுகள், குளச்சல் – 20 வீடுகள், கோடிமுனை – 20 வீடுகள், வாணியக்குடி – 100 வீடுகள், குறும்பனை – 20 வீடுகள் ஆகமொத்தம் – 180 வீடுகளும் கட்டப்பட்டு பொதுமக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1998–99ஆம் ஆண்டில் வாணியக்குடி – 100 வீடுகள், கீழகடியப்பட்டணம் – 50 வீடுகள், கோடிமுனை – 50 வீடுகள், ஆகமொத்தம் 200 வீடுகள் கட்டப்பட உள்ளன.

1996–97ஆம் ஆண்டில் ரூ.20,550 செலவில் 5 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 1997–98ல் ரூ.3,20,300 செலவில் 11 மீனவ கிராமங்களில் தெருவிளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வாணியக்குடி மீனவ கிராமத்தில் ரூ.22,000 செலவில் 2 சோடியம் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தில் 1996 முதல் 1999ஆம் ஆண்டு வரை 62 நபர்களுக்கு ரூ.32.25 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீனவ கிராமங்களில் இணைப்புச் சாலைகள் ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 12 மீனவ கிராமங்களை சார்ந்தவர்களுக்கு 525 வெளிபொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.52.5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

சாலை, குடிநீர் வசதி, குடியிருப்புகள், சமூக நலக்கூடம், பொதுவிநியோகக் கட்டடம், படிப்பகம், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள் என பல அத்தியாவசியப் பணிகளை மக்களுக்கு கிடைக்க ஆவண செய்துள்ளேன்.

இந்திய துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம் எனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயலாற்றிவரும் **கலைஞர்** ஆட்சியில் எனது **குளச்சல்** சட்டமன்றத் தொகுதியில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 1997–98ஆம் ஆண்டில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், முட்டம் ஊராட்சியில் ரூ.64.16 இலட்சம் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், சைமன் காலனி, ஊராட்சியில் ரூ.99.34 இலட்சம் செலவில் பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குளச்சல் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு திட்டப் பணிகளில் 26 சாலைப் பணிகள் ரூ.49.57 இலட்ச செலவில் 23.30 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் பணிகள் ரூ.23.64 இலட்சத்தில் 2.95 கி.மீ. நீளத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 241 குழல் விளக்குகள் மற்றும் 26 சோடியம் விளக்குகள் ரூ.7.47 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.4.95 இலட்சம் செலவில் 11 துப்புரவுப் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குழித்துறை ஆற்றிலிருந்து ரூ.172 இலட்சம் செலவில் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தண்ணீர் ஏற்றப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

கல்வித்துறையில் 1997–98ஆம் ஆண்டில் கடியப்பட்டிணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, 1998–99ஆம் ஆண்டில் சுண்டப்பற்றிவிளை அரசு உயர்நிலைப்பள்ளி, கணபதிபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் ஒரப்பனவிளை உயர்நிலைப்பள்ளி, புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, ஆசாரிப்பள்ளம், தேவி உயர்நிலைப் பள்ளி, குளச்சல் ஆகிய மூன்று மேல்நிலைப்பள்ளிகளுக்கு தேர்வு மையம் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

ஆசாரிப்பள்ளம் காசநோய் மருத்துவமனை வளாகத்தில் கண்மருத்துவமனை பிரிவு தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதை தொடர்ந்து கண்மருத்துவமனை பிரிவு தொடங்கப்பட்டது. மேலும் குளச்சல் திக்கணங்கோடு ஆகிய இடங்களில் 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு எனது குளச்சல் சட்டமன்ற தொகுதிகளில் மின்னழுத்த குறைபாடு இல்லாத வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கிராம மக்கள் அனைவருக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்வாயிலாக இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தை முன்னேற்றிடும் வகையில், விரைந்து பணிகளைச் செயலாற்றிவரும் முதல்வர் **கலைஞர்** அவர்களின் ஆட்சியில், எங்கள் குளச்சல் தொகுதி பல்வேறு வளர்ச்சிகளில் முன்னிலை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. ●

# கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தறித் தொழில்

தமிழகத்தில் இயங்கி வரும் சுமார் 4 இலட்சம் கைத்தறிகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 13,500 கைத்தறிகள் இயங்கி வருகின்றன. நெசவாளர்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்த அரசு பல வகைகளிலும் திட்டமிட்டு அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பளித்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 64 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 16 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் ஆக மொத்தம் 81 சங்கங்களும் ஒரு கூட்டுறவு நூற்பாலையும் இயங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1996—97ஆம் ஆண்டு ரூ.1980.90 இலட்சம் மதிப்புள்ள 126.91 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு அதில் 111.26 மீட்டர் ரூ.1949.77 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன. 1997—98ஆம் ஆண்டு ரூ.1728.29 இலட்சம் மதிப்புள்ள 106.67 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு 108.47 மீட்டர் ரூ.2060.97 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன. 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய ரூ.1518.60 மதிப்புள்ள 83.77 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு 95.66 மீட்டர் ரூ.1857.78 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

### சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

18 வயதிற்கு மேற்பட்டு 60 வயதிற்குட்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர தகுதி உள்ளவர்களாவார்கள். இவர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ.100 பங்குத் தொகை இருக்க வேண்டும். உறுப்பினர்களது கூலியில் 8 பைசா சந்தா தொகையாக பிடித்தம் செய்யப்படுகிறது. சந்தா தொகைக்கு இணையாக 4 பைசா மத்திய அரசும், 4 பைசா மாநில அரசும் மானியமாக வழங்குகின்றன.

இத்திட்டத்திலுள்ள 60 வயதிற்குள் இறக்கும் உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு உறுப்பினர் சந்தா, அரசு சந்தா ஆகியவற்றிற்கான வட்டியுடன் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் ரூ.35,000மும் கோ—ஆப்டெக்ஸ் நல்வாழ்வு உதவித் தொகையாக ரூ.5,000மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 69 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 4,663 உறுப்பினர்கள் உள்ளனர். மேற்படி திட்டத்தின் கீழ் 1996—97ஆம் ஆண்டிற்கு 4 சதவிகித மாநில அரசு சந்தாவாக ரூ.8.05 இலட்சமும், 7 சதவிகித வட்டியாக ரூ.16.68 இலட்சமும், 1997—98ஆம் ஆண்டிற்கு 4 சதவிகித மாநில அரசு சந்தா ரூ.10.24 இலட்சமும், 4 சதவிகித மத்திய அரசு மானியம் ரூ.15.70 இலட்சமும், 7 சதவிகித வட்டி ரூ.38 இலட்சமும், 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 4 சதவிகித மத்திய அரசு மானியம் ரூ.2 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்


18 வயதிற்கு மேற்பட்டு 60 வயதிற்கு முந்தைய 5 ஆண்டுகளில் சங்க சராசரி உற்பத்தியில் 75 சதவிகிதம் குறையாமல் உற்பத்தி மேற்கொண்ட உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர தகுதி பெறுகிறார்கள். மேற்படி உறுப்பினர்கள் தாங்கள் பெறும் கூலியிலிருந்து ரூ.2 மாதமொன்றுக்குச் சந்தாவாக செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 60 வயதிற்குள் காலமாகும் உறுப்பினர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1492 உறுப்பினர்கள் உள்ளனர். 16 குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

### முதியோர் ஓய்வூதியத் திட்டம்

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் 60 வயதிற்கு மேற்பட்டும்



இரண்டு வருடங்கள் தொடர்ந்து வரவு செலவு செய்தும், சந்தா தொகையினை தவறாமல் செலுத்தி வரும் உறுப்பினர்கள் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதி யுடையவராவார்கள். இத்திட்டத்தின் கீழ் 1997—98ஆம் ஆண்டில் 67 உறுப்பினர்களுக்கு ரூ.97,350க்கான பரிந்துரை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31.12.98 முடிய 31 உறுப்பினர்களுக்கு ரூ.84,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

### தள்ளுபடி மானியம்

இத்திட்டத்தின்படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் 20 பைசா அரசு தள்ளுபடியாக வழங்கி வருகிறது. மேற்படி தள்ளுபடித் தொகை பருத்தி ரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100க்கு மிகாமலும், பட்டு ரகங்களுக்கு ரூ.200க்கு மிகாமலும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திற்கு தள்ளுபடி மானியம் 1996—97ஆம் ஆண்டு ரூ.2.57 கோடியும், 1997—98ஆம் ஆண்டு ரூ.2.79 கோடியும், 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய ரூ.4.99 கோடியும் வழங்கப்பட்டன.

### இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 81 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 42 சங்கங்களில் சுமார் 3 ஆயிரம் தறிகள் மூலம் வேட்டி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. சராசரியாக மாதமொன்றுக்கு 75 ஆயிரம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

1998—99ஆம் ஆண்டில் 8 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு கோ—ஆப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

### தறிக்கூடத்துடன் கூடிய வீட்டு வசதி

சொந்த மனை உள்ள வீடற்ற நெசவாளர் களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீட்டு வசதித் திட்டம் மத்திய, மாநில அரசுகள் மூலமாக ஹட்கோ நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் குழு வீடுகள் அமைத்தல் மற்றும் பரவலாக வீடு கட்டும் திட்டங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட நெசவாளர்களுக்கு 1996—97ஆம் ஆண்டு 76 வீடுகள் கட்ட கடன் ரூ.19 இலட்சமும் மானியம் ரூ.17.48 இலட்சமும், 1997—98ஆம் ஆண்டு 106 வீடுகள் கட்ட ரூ.12.19 இலட்சமும் வழங்கப்பட்டன.

### தொகுப்பு செறிவுத் திட்டம்

இத்திட்டமானது பகுதிவாரியான நெசவாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1994—95ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம்: நெசவு பயிற்சி அளித்தல், புதிய தறிகள் வழங்குதல், தறி உபகரணங்கள் வழங்குதல், மின் வசதி செய்து கொடுத்தல், கிராமபுறங்களில் விற்பனை மையம் அமைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இதுகாறும் 28 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 800 உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் 1996—97ஆம் ஆண்டு ரூ.22,44,975யும் 1997—98ஆம் ஆண்டு ரூ.14,71,050யும் இம்மாவட்டத் திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### சுகாதார செறிவுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசு நிதியுதவியுடன் நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென 1994—95ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்

பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் மருத்துவச் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,500 வீதம் வழங்கப்படுகிறது. நெசவாளர்களின் கண் பரிசீலனைக்கு ரூ.40 வீதமும், கண்ணாடிக்கு ரூ.150 வீதமும் வழங்கப்படுகிறது.

குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு ரூ.100ம், மகப்பேற்றுக்கு ரூ.500ம் வழங்கப்படுகிறது. மேலும் சுகாதாரச் செறிவுத் திட்டத்தின் கீழ் 50 நெசவாளர் குடும்பங்களுக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.35,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஒரு இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு இம்மாவட்டத்தில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1996—97ஆம் ஆண்டு ரூ.5,83,228, 1997—98ஆம் ஆண்டு ரூ.2,66,250, 1998—99 டிசம்பர் வரை ரூ.7,89,750 மானியத் தொகைகள் அனுமதிக்கப் பட்டுள்ளது.

### கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச்சாலை அமைக்கும் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

கூட்டுறவுத்துறையில் அல்லாத நெசவாளர்களைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வருதல்,

புதிய வடிவமைப்புகளில் ரகங்கள் உற்பத்தி செய்ய பயிற்சியளித்தல்,



உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை விற்பனை செய்ய (ஏற்றுமதி உட்பட) வழிவகை செய்தல்,

தரமான முறையில் சாயம் தோய்க்க சாயச்சாலை அமைத்தல்,

நெசவாளர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு அளித்தல் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 12 கைத்தறி வளர்ச்சி மையங்களும், ஒரு தரமான சாயச்சாலையும் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### அரசு பங்கு மூலதனம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு தொகையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பங்கு மூலதனமாக 1997—98ஆம் ஆண்டில் 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ.2.40 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

### விற்பனைக் கூடம் நவீனப்படுத்தும் திட்டம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை மேம்படுத்தும் நோக்கில் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் 1997—98ஆம் ஆண்டில் இரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ.6 இலட்சம் மானியமாக அனுமதித்து வழங்கப் பட்டுள்ளது. 1998—99ல் ரூ.50,000 வழங்கப் பட்டுள்ளது.

### வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை

இத்திட்டத்தின் கீழ் ஏழை நெசவாளர்களின் பங்குத் தொகையினை அதிகரிப்பதற்காக தலா ரூ.2,000 அரசால் வழங்கப் படுகிறது. 1997—98ல் 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ.75,000 வழங்கப்பட்டுள்ளது. 1998—99ல் ரூ.1,75,000 — 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

புனித சவேரியாரின் காலத்தில் கோட்டாறு ஒரு பெரிய ஊர்; சந்தை கூடும் இடம், எனவே எந்நேரமும் வியாபாரச் சந்தடிகள் நிறைந்த இடம். வெளியூர் வியாபாரிகள் அடிக்கடி இங்கு வந்து போவதுண்டு. கேரளாவைச் சேர்ந்த தோமையார் கிறிஸ்தவர்கள் சிலரும் இங்கு குடியேறியிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள்.

'பழையாறு' என்னும் ஆறானது கடலை நோக்கி வளையும் பகுதியில் இப்பேரூர் அமைந்திருந்ததினால் அதற்குக் 'கோட்டாறு'

கிறிஸ்துவர்களையும், சில பரதர், முக்குவர் கிறிஸ்தவக் குடும்பங்களையும் சந்திப்பதற்காகச் சவேரியார் அடிக்கடி கோட்டாறுக்கு வந்து போவது வழக்கம். அவர் அங்கு வந்து தங்கும்போதெல்லாம் பலி பூசையும், செபமும் செய்த இடம்தான் இன்று கோட்டாறு பேராலயம் உள்ளடக்கியுள்ள மரியன்னையின் சிற்றாலயம் என மக்கள் கருதுகின்றனர்.



## கோட்டாறு

# புனித சவேரியார் பேராலயம்

(ஆற்றின் வளைவு) என்ற பெயர் வழங்கலாயிற்று. கோட்டாறு ஒரு காலத்தில் வேணாடு என்ற மாநிலத்தின் தலைநகர். எனவே பல எல்லைப் போர்களுக்கும் அது களமாக விளங்கிற்று. இன்றைய நாகர்கோவில் நகர்ப்புறமானது பழைய கோட்டாறு பேரூரின் விரிவாகும்.

பரம்பரைக் கூற்றுப்படி, வணிக நோக்குடன் கோட்டாற்றில் குடியேறியிருந்த தோமையார்

கோட்டாற்றில் சவேரியார் தங்கிச் செபித்த அதே இடத்தில்தான், 1603ஆம் ஆண்டில் சுவாமி புச்சேரியோ எழுப்பிய புதிய சிற்றாலயத்தின் பீடமும், பீட முற்றமும் அமைந்திருந்தனவென்று 1699ஆம் ஆண்டு சுவாமி பீற்றர் மார்ட்டின் தன் மடல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். இதே பரம்பரைக் கருத்தை 1719ஆம் ஆண்டில் சுவாமி வெனான்சியுஸ் பூசெ என்பவரும் ஆதரித்துப் பேசுகிறார்.



# அலங்கார உபகார அன்னை ஆலயம்

போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிற்கு வரும் முன்பே குமரிமுனையில் கிறிஸ்தவ ஆலயமும், கிறிஸ்தவ சமூகமும் இருந்ததாகத் தெரிய வருகிறது. தூய பிரான்சிஸ் சவேரியார் குமரிமுனைக்கு முதன்முறையாக வந்தபோது குமரி முனையில் மரியன்னை ஆலயம் ஒன்று இருந்ததாக இயேசு சபையினரின் பழங்கால குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

குமரி முனையை மறைபரப்பு மையமாகக் கொண்டு இராமநாதபுரத்திலிருந்து தூத்தூர் வரை இயேசு சபையினர் பணியாற்றியுள்ளனர். கன்னியாகுமரி பங்கு மேல மணக்குடி, கீழ மணக்குடி, தாமரைக்குளம், கோவளம், ஆரோக்கியபுரம் ஆகியவற்றை கிளைப் பங்குகளாக கொண்டிருந்தது. தற்போது சின்னமுட்டம்,அஞ்சுக்கூட்டுவிளை, புதுக் கிராமம், சிலுவைநகர் ஆகியவை கிளைப் பங்குகளாகச் செயல்பட்டு வருகின்றன.

தற்போதுள்ள ஆலயத்தின் அடிக்கல் 1900ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி நாட்டப்பட்டு 1954ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

★ ★ ★

*1603ஆம் ஆண்டில் களிமண்ணாலும், பலகையினாலும் உருவான முதற் சிற்றாலயம், மக்கள் வாரி வழங்கியப் பெருவாரியான காணிக்கைகளின் பலனால், 1640ஆம் ஆண்டு, முதல் முறையாகக் கற்களினால் கட்டப்பட்டது. இன்று சவேரியார் பேராலயம் உள்ளடக்கியுள்ள மரியன்னை சிற்றாலயத்திலுள்ள மரப் பீடம்தான் 1640ஆம் ஆண்டு உருவான அந்த முதல் கற்கோவிலின் பீடம் எனக் கருதலாம்.*

*ஆண்டுதோறும் பெருகி வந்த பக்தர்களின் வழிபாட்டுக்கு இம் முதல் சிற்றாலயத்தில் இடம் போதாமையினால் வேறொரு பெரிய ஆலயத்தை எழுப்ப இயேசு சபைக் குருக்கள் தீர்மானித்தனர். 1698ஆம் ஆண்டில் திருவாங்கூர் மாநிலத்தில் உருவாக்கப்பட்ட ''நேமம் மிஷன்'' என்ற வேதபோதகத் தளத்தில், சைமன் கர்வாலோ, பீற்றர் மார்ட்டின், பெர்னார்டு டி சா, செவேரியோ போர்கேசே போன்ற இயேசு சபைக் குருக்கள் பணியாற்ற வந்தனர். 1698ஆம் ஆண்டில் கோட்டாற்றில் புனித சவேரியாரின் முதல் சிற்றாலயத்திற்கருகே இயேசு சபைக் குருக்கள் ஒரு பெரிய கற்கோவிலை உருவாக்கினர்.*

*இப்பெரிய கற்கோவில்தான் 1865ஆம் ஆண்டில் மீண்டும் திருத்திப் பெரிதாக்கப்பட்டது. மேற்குப் புறமாக நீட்டப்பட்டு, வடக்கும் தெற்குமாகப் புறப்பகுதிகள் எழுப்பப்பட்டன. அதனால் ஆலயம் சிலுவை வடிவில் அமைந்தது. கூரையின் பழைய ஓடுகள் அகற்றப்பட்டுப் பீடத்தின் நேர் உயரே விதானமும், ஆலயத்தின் இருமருங்கிலும் வளைவு மண்டபங்களும் அமைக்கப்பட்டன. அதே சமயத்தில், இன்னமும் வெளியே தனித்திருந்த முதல் பழைய (மரியன்னை) சிற்றாலயத்தின் ஓட்டுக் கூரையும் அகற்றப்பட்டு அதற்கு ஒரு சிறு விதானம் கட்டப்பட்டது.*

*1876ஆம் ஆண்டில் கொல்லத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் ஜோக்கின் பெர்னாண்டஸ்*

கோட்டாறு புதிய கோவிலின் அழகியப் பிரதான மரப்பீடத்தை அமைத்தார். இப்பீடத்தில் உன்னதமாக வீற்றிருக்கும் புனித சவேரியாரின் திருச்சிலை கோவாவில் செய்யப்பட்டதாகும்.

பேராலயத்தின் முகப்பில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அழகியக் கல் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இம் மண்டபத்திற்கான பெரிய கற்கள் ஆரல்வாய் மொழியி லிருந்து திருவாங்கூர் மகாராஜாவின் யானைகளால் இழுத்து வரப்பட்டன. இந்தியக் கலைப்பாணியில் தோன்றும் இவ்வழகிய மண்டபத்தைத் திருவாங்கூர் சமஸ்தானக் கட்டட நிபுணர் ஜான் லூயிஸ் பெர்னாண்டஸ் நிறுவினார்.

கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து பிரிக்கப் பட்டு 1930ஆம் ஆண்டு மே 26ல் கோட்டாறு தனி மறைமாவட்ட மாகியது. இப்புதிய மறைமாவட் டத்திற்குக் கோட்டாறு புனித சவேரியார் கோவில் தலைமைக் கோவிலாக உயர்ந்தது. அதன் பழமைச் சிறப்பினாலும், புனித சவேரியார் மீது வைத்த பக்தியினாலும் மக்கள் அதனைப் "பேராலயம்" எனப் பெருமையோடு அழைத்து வருகின்றனர்.


புனித சவேரியார் பேராலயம் 1955ஆம் ஆண்டு, சுவாமி பர்னபாஸ் பேராலயப் பங்குக் குருவாக இருந்த காலத்தில், மேலும் விரிவுபடுத்தப்பட்டது. வடக்குத் தெற்காக ஆலயத்தின் பக்கங்கள் நீட்டிக் கட்டப்பட்டன. அதனால் அதுவரை தனித்திருந்த மரியன்னை சிற்றாலயம் இப்போது பெரிய கோவிலின் ஒரு பகுதியாக உள்ளேயே அமைந்து விட்டது. ஆலயத்தின் மேற்குப் பகுதியும் நீட்டப்பட்டுச் சக்ரீஸ்தியாக மாறியது. இவ்வாறு விரிவுப்படுத்தப்பட்ட இப்பேராலயம் 1956ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி ஆயர் ஆஞ்ஞிசாமி அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இது 1930ஆம் ஆண்டில் உருவான கோட்டாறு மறை மாவட்டத்தின் வெள்ளிவிழா நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

புனித சவேரியார் இந்தியாவுக்கு வந்த 400வது ஆண்டு நிறைவாக 1942ஆம் ஆண்டில் கோட்டாறு பேராலய வளாகத்தில், வடகிழக்கு மூலையில், சவேரியாரின் திருவுருவைத் தாங்கிய ஓர் கோபுரமும், அதனையடுத்து லூர்து அன்னையின் கெபி ஒன்றும் அமைக்கப்பட்டன.

1975ஆம் ஆண்டு, அன்றையப் பேராலயப் பங்குக்குரு சுவாமி ஜோசபாத் மரியா ஆலய வளாகத்தில் அலங்கார மேடை ஒன்றை அமைத்தார்.

இவ்வாறு 1603ஆம் ஆண்டு களிமண்ணால் உருவாகி, இன்று அலங்கார மேடை வரை உயர்ந்து நிற்கும் புனித சவேரியாரின் பேராலயம் மக்களின் உள்ளங்களிலும் உயர்ந்து நிற்கிறது.

★ ★ ★



விவேகானந்தர் பாறை

# மாமேதை ஷெய்கு பீர்முஹம்மது ஒலியுல்லா




இன்தமிழ் இறையிலக்கியத்தின் தாயகமாம் மெய்ஞ்ஞானப் பேரொளி ஷெய்கு பீர் முஹம்மது ஒலியுல்லா (ரலி) அவர்கள் குற்றால அருவியின் குன்றாத இதமும் வற்றாத தாமிரபரணி வளைந்தோடும் எழிலும் தென்றலும் கொஞ்சும் தென்காசியில் சிறுமலுக்கர் என்னும் சிறப்புடையோர்க்கு மகவாய்ப் பிறந்தவர்தான் ஞான மாமேதை பீர்முகம்மது ஒலியுல்லா.

ஞான மாமேதை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்கள் இளையோராய் இருக்கும்போது உலகத்து அறிவிலோ, உற்றார் கூறிய உரைகளிலோ ஆர்வம் காட்டாதவராக இருந்தார். குன்று மேலிட்ட விளக்காய்த் தங்கள் குலக் கொழுந்து திகழ வேண்டுமென்று நினைத்த பெற்றோர்களுக்கு இது கவலையைக் கொடுத்தது. ஒரு நாள் அவரின் தந்தை வெளியே சென்றிருந்த வேளையில், தாயார் அவருக்கு அன்னம் தந்து கொண்டிருந்தார்கள். சோறு வாய்க்காகும், அறிவுரையின் சாறு உளம் செல்ல அது வாய்ப்பாகும் என்று எண்ணி, தாயார் மகனைப் பார்த்துச் சொன்னார் "செல்வமே, தீன் தழைக்கவே நம் குலம் வாழ்கிறது. உங்கள் பாட்டனாரைப் பாரு; ஊரில் அவர்களுக் கிருக்கின்ற உயர்ந்த இடத்தைப் பாரு. உன் தந்தையோ ப்ன்மொழிகளும் பயின்றவர். மாற்று மதத்தவரும் கூட அவரைப் போற்றுகின்றனர்; ஐயம் போக்கிச் செல்கின்றனர். அந்த பரம்பரையில் வந்த நீ இப்படி (பராக்காக) இருக்கலாமா? படிக்க வேண்டாமா?" என்று. இந்த வேளையில் வெளியில் சென்றிருந்த அவரது தந்தையும் வீட்டிற்கு வந்தார். அறிவுரை கூறுகின்ற அன்னையையும் ஒளியும் உறுதியும் கலந்து உறவாடும் களங்கமற்ற முகத்தோடு கவனமாகக் கேட்கும் மைந்தனையும் அவர் ஒளிந்து நின்று பார்த்தார். மறுமொழிக்காக மழலை உதிர்ந்தது. "அம்மா, உங்கள் உயர்ந்த உள்ளத்தை நான் உணருகிறேன். உங்கள் கவலையும் எனக்குப் புரிகிறது. உங்களுக்கு ஐயம் வேண்டாம். தந்தையின் பெயர் சொல்லி நான் தரப்போகும் உரைகளை விந்தை என்று உலகம் வியக்கத்தான் போகிறது" என்று மைந்தன் விடை பகர்ந்தார்.

இறை ஞானம் அவர் நெஞ்சில் இழையோடி இருந்தது. பிறப்பிலே வந்த சிறப்பு என்றுதான் அதனைக் கூறவேண்டும். ஏகனைக் கான வேண்டும்; அதற்குத் தனிமை வேண்டும். அரவ மில்லாத இடத்தில் அருந்தவம் இயற்ற வேண்டும் என்று அவர்கள் விரும்பினார். காடுகளும் மோன நிலை மேடுகளும் அவரைக் கவர்ந்தன. அணைக்கின்ற உறவு, பிணைக்கின்ற சுற்றம் இவைகளைத் துறக்கின்ற துணிவு அவருக்கு ஏற்பட்டு விட்டது.

ஆண்டுகள் பல கடந்தன. இப்போது நாம் காணும் கேரள மாநிலத்தின் வடகிழக்கு மலைப் பகுதிகளில் அவர்கள் நெடுங்காலம் கடும்தவம் புரிந்தார். பின்னால் ஆனைமலையில் ஏறக்குறைய 25 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் பீர்மேடு என்ற பகுதியில் வாழ்ந்திருந்ததனால்தான் அவ்விடத்திற்கு அப்பெயர் ஏற்பட்டதாக ஆராய்ச்சிக் குறிப்புகள் கூறுகின்றன.

தன்கலையைக் கற்பதற்குத் தழைக்கும் வழிதந்த பீர் முஹம்மது அவர்களைத் 'தற்கலையார்' என்று அழைத்தார்கள். ஏனென்றால் தங்க நகை பூணுதற்குத் தளிர்மேனி அங்கம்போல் தக்கலை இருந்தது. அப்போது தக்கலையின் பழமையான தொழில் நெசவுதான். அவர் செய்ததும் அதுதான். தூய தமிழ், தக்கலையின் தனிச்சொத்தாக இருந்தது. மெய்ஞ்ஞானத் தூது வந்த அவர் அதில் வித்தாக இருந்தார்.

இறைஞானத்திலும் இலக்கியத்திலும் வரலாறு படைத்த அவர் ரஜப் மாதம் பூரணப் பதினான்கு வெள்ளிக் கிழமை இரவு பூதவுடல் நீத்தார். அடிக்கரும்பின் சாறெடுத்துக் காய்ச்சி அடுக்கி வைத்த கட்டிகள் போல் இனிமைக்கு இலக்கணம் வகுக்கும் அவர்களது பாக்களில் மெய்ஞ்ஞானம் சாறெனக் கலந்து கற்போர் மனத்தளவிற்குக் கருத்துக்களை ஈந்து கொண்டிருக்கின்றன.

அவர்களது பாடல்களைப் படிக்கின்றபோது அகங்கள் பல அற்புதங்களைச் சந்திக்கின்றன. அவர்களது பாடல்கள், வாய்க்கு விருந்தாகலாம்; நோய்க்கு மருந்தாகலாம்; அவைகளை உணர்ந்தாலோ உலகை இருந்தாளலாம்.

அவைகள், ஞானப் புகழ்ச்சி, ஞானப் பால், ஞானப் பூட்டு, ஞான மணிமாலை, ஞானக் குறம், ஞான ரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெய்ஞ்ஞான சரநூல், ஞான நடனம், ஞான முச்சுடர்ப் பதிகங்கள், ஞான விகட சமர்த்து, ஞானத் துறவுகோல், ஞானத் தித்தி. மெய்ஞானப் பேரொளி பீர்முகம்மது (ரலி) அவர்களின் தர்கா தக்கலை ஊரில் அமைந்துள்ளது.

பீர்முகம்மது (ரலி) அவர்களின் பேறுகொண்ட விழா, சமயநெறி விழா சன்மார்க்க விழாவாக இலங்கி வருகிறது. அவர்களது விழாவிற்குத் தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, அவர்கள் தங்கித் தவமிருந்த கேரள மாநிலத்திலிருந்தும் மதவேறுபாடின்றி திரளான மக்கள் வருகின்றனர். ●

# எங்கள் ஊர்ப் பிரச்சினை

**பிரச்சினை**

பெரம்பலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், வங்குடி பஞ்சாயத்த வங்குடி கிராமத்திற்கு வடக்கு தெருவில் 10,000 லிட்டர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டுதல், சுடுகாடு மற்றும் சுடுகாட்டுப் பாதை அமைத்தல், பகுதிநேர நியாயவிலைக் கடை, ஊர் முழுவதுமான புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், பொதுக்குளத்தை தூர்வாரி, சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் மதகு அமைத்து தருவது ஆகியன தற்போதைய அவசியத் தேவையாகும்.

மற்ற பஞ்சாயத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எங்கள் பஞ்சாயத்து ஒடுக்கப்பட்ட, துண்டிக்கப்பட்ட பகுதியாக கருதுகிறோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி விரைந்து நடவடிக்கை எடுக்க தக்க ஏற்பாடு செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*— வி.கே. திருநாவுக்கரசு, பொதுமக்கள் சார்பாக, பெரம்பலூர் மாவட்டம்.*

**தீர்வு :**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் பதில் :**

இக்குடியிருப்பின் 1991 கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 250 ஆகும். 1996இன் படி 279 ஆகும். இக்குடியிருப்புக்கென நடப்பு நிதியாண்டில் (1998—99இல்) ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய ஓர் நிரந்தரக் குடிநீர்த் திட்டம் ரூ.8.70 இலட்சத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே இவ்வாண்டிற்குள் திட்டம் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதில் :**

வங்குடி கிராமத்தில் சுடுகாடு மற்றும் சுடுகாட்டு பாதையினை அடுத்த நிதியாண்டில் (1999—2000) ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் பணிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

**மாவட்ட வழங்கல் அலுவலர் பதில் :**

வங்குடி கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான கருத்துரு கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளரிடம் கோரப்பட்டுள்ளது. கருத்துரு பெறப்பட்டவுடன் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க உத்தரவிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**உடையார்பாளையம் வட்டாட்சியர் பதில் :**

வங்குடி கிராமத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் ஊராட்சி மன்றத் தலைவர் ஒத்துழைப்புடன் விரைவில் அகற்றப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதில் :**

வங்குடி கிராம பொதுக்குளம் சிறுபாசன குளத்தில் சேராததால், ஊராட்சி நிதியிலிருந்து மன்றத் தலைவர் மூலம் இந்த நிதி ஆண்டில் பொதுக்குளத்தை தூர்வாரி, சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் மதகு அமைத்து தருமாறு தெரிவிக்கப் படுகிறது.



**பிரச்சினை:**

எங்கள் ஊர் பாரியூர் நஞ்சக்கவுண்டன் பாளையம், இந்திராநகர் காவனி, கோபி தாலுக்கா, ஈரோடு மாவட்டம் மக்களுக்கு இதுவரை பஞ்சாயத்தில் பணமில்லை என்று தண்ணீர் வரவில்லை. இப்போது பணம் கட்டி தண்ணீர் வருகிறது. ஆனால், கொங்கு வேளாளர் கவுண்டர்களுக்கு எந்த நேரமும் தண்ணீர் செல்கிறது. இந்திரா நகர் காலனிக்கு தண்ணீர் வருவதில்லை. தண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது. காலை 5 மணியிலிருந்து 11 மணி வரைக்கும் தண்ணீர் வந்தால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எங்களுக்கு தண்ணீர் வரும் குழாய் பைப்பை தண்ணீர் எடுத்து வரும் ஊழியர்கள் சுயநலத்திற்காக நிறுத்தி வைத்துக்கொள்கிறார்கள். ஆகவே, தண்ணீர் எங்களுக்கு அதிகமாக வர, தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*ஊர் பொதுமக்கள், பாரியூர்,*
*ஈரோடு மாவட்டம்.*

**தீர்வு :**

கோபி ஊராட்சி ஒன்றியம், பாரியூர் ஊராட்சி, நஞ்சக்கவுண்டன்பாளையம் இந்திரா நகர் ஆதிதிராவிடர் காலனி பொதுமக்களிடமிருந்து குடிநீர் வசதி கோரி வரப்பெற்ற கடிதம் தொடர்பாக கோபி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்திராநகர் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள நான்கு தெருக்களிலும், கூட்டுக்குடிநீர்த் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட பொதுக் குடிநீர்க் குழாய் ஒன்றும், ஆழ்குழாய்க் கிணறு மேல்நிலைத் தொட்டியிலிருந்து வழங்கப்படும் பொதுக்குடிநீர் குழாய் ஒன்றும் ஆக இரண்டு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், தவிர, தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், 29-1-1999 அன்று நேரடியாக ஆய்வு மேற்கொண்டு விசாரித்ததில், இந்திரா நகர் மூன்றாவது வீதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறு மேல்நிலைத் தொட்டி குடிநீர்க் குழாயில் மட்டும் போதிய தண்ணீர் வருவதில்லையென ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் தெரிவித்ததாகவும், மேலும் அக்குழாயில் ஏற்கெனவே வந்த தண்ணீர் போதுமானதாக இருந்ததாகவும், தற்போது சுமார் ஒருமாத காலமாகத்தான் போதிய தண்ணீர் வருவதில்லை எனவும் தெரிவித்ததாகவும், சம்பந்தப்பட்ட குழாய் மெயின் குழாய் இணைப்பில் இருந்து சுமார் 35 அடி தூரம் உள்ளதாகவும் குடிநீர்க்குழாயில் ஏதாவது அடைப்பு இருக்கலாம் எனக் கருதி, மேற்படி குழாயினை அகற்றி அடைப்புகள் சரிபார்த்து மீண்டும் பொருத்தி குடிநீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்துமாறும் ஊராட்சித் தலைவரை கேட்டுக் கொண்டதாகவும், இது தவிர இந்திரா நகர் ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர் பிரச்சினை ஏதுமில்லை என்றும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதென்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்,*
*ஈரோடு மாவட்டம் (ஊ), ஈரோடு.*



**பிரச்சினை :**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் பனையப்பட்டி அஞ்சல் உதயசூரியபுரம் கிராமம் எங்கள் ஊராகும்.

எங்கள் ஊரின் வழியாக புதுக்கோட்டையிலிருந்து பொன்னமராவதி செல்லும் நெடுஞ்சாலை செல்கிறது. மேற்படி நெடுஞ்சாலையிலிருந்து மேலப்பனையூர் கிராமத்திற்கு செல்லும் குறுக்குச் சாலை செல்கிறது.

புதுக்கோட்டை பொன்னமராவதி நெடுஞ்சாலையிலிருந்து மேலப்பனையூர் அரசினர் காலனி வரை குறுக்குச் சாலையின் மிகவும் இருட்டான பகுதியில் செல்ல வேண்டியுள்ளதால் மின்சார இணைப்பு வேண்டி நீண்டநாள் போராட்டத்திற்குப் பிறகு பனையப்படி ஊராட்சி நிதியிலிருந்து மின்சார வாரியத்திற்கு பணம் கட்டி சுமார் 3 ஆண்டுகள் ஆகின்றன. கம்பங்கள் (போஸ்டர்கள்) கொண்டு வந்து போட்டு 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவற்றில் சில நட்டாச்சு, சில நடவில்லை.

இதுவரை கம்பம் நட்டு மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. எந்த வேலையும் நடைபெற வில்லை. இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*மாரியப்பன், பொதுமக்கள் சார்பாக*
*புதுக்கோட்டை மாவட்டம்.*

**தீர்வு :**

உதயசூரியபுரத்திற்கு தெருவிளக்குகள் அனுமதிக் கப்பட்டுள்ள வேலை முடித்து தெரு விளக்குகள் எரிய விடப்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*மேலாண்மை இயக்குநர்,*
*திருமயம் கிராமிய மின்சார கூட்டுறவு சங்கம்.*

**பிரச்சினை :**

எங்கள் தெருவில் மக்களின் அடிப்படை தேவைகளான சாலைவசதி, சாக்கடைவசதி, தெருவிளக்கு வசதி போன்றவை இல்லாமையால் நாங்கள் மிகவும் அவதிப்படுகிறோம். இதுகுறித்து பல மனுக்கள் அனுப்பியும் எவ்வித பயனுமில்லை. இந்த தெருவில் கழிவுநீர் தேங்கி அனைத்து வியாதிகளின் உற்பத்தி ஸ்தலமாக மாறி வருகிறது. மழைகாலத்தில் தண்ணீர் தெருக்களில் தேங்கி, நடந்து செல்லவே முடியாத சூழ்நிலை உள்ளது. இந்தத் தெருவில் ஆரம்பப்பள்ளி ஒன்று உள்ளதால், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் படும் அவதி சொல்லி மாளாது.

எனவே எங்கள் துயர்துடைக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

*பாவாயம்மாள் தெருவாழ் மக்கள் 3ஆவது வார்டு,*
*ஜாகர்அம்மாபாளையம்,*
*சேலம் மாநகராட்சி 2ஆவது வட்டம்,*
*சேலம்.*

**தீர்வு :**

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.3இல் உள்ள பாவாயம்மாள் தெருவாழ் மக்கள் பகுதிக்கு மணல் கொட்டி சமம் செய்து சாலைகள் தற்காலிகமாக சீரமைக்கப் பட்டுள்ளது. மேலும் சேலம் மாநகராட்சி நிதிநிலைமை அபிவிருத்தி அடைந்ததும், நடப்பு நிதியாண்டில் சாக்கடை வசதிகள் தார்ச்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஆணையாளர்,*
*சேலம் மாநகராட்சி, சேலம்.*

**பிரச்சினை :**

எங்கள் ஊர் சின்ன நெற்குணம் ஊராட்சி மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது எங்கள் ஊரில் குடிநீருக்கு அவதிபடுகின்றார்கள் என்று எங்கள் யூனியனில் ஒரு கைபம்பு இறக்கினார்கள், அதை இறக்கி மூன்று மாதம் ஆகின்றது, இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தண்ணீருக்காக மக்கள் அவதிபடுவதை நேரில் வந்து பார்வையிட்டாவது எங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*க.தாமஸ், சின்ன நெற்குணம் ஊராட்சி,*
*வின்னனூர் வழி, சிதம்பரம் வட்டம்—608 704.*

**தீர்வு :**

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம் சின்னநெற்குணம் ஊராட்சியில் 1997—98ஆம் 10ஆவது நிதிக்குழு திட்டத்தின்கீழ் சின்னநெற்குணம் சின்னகாலனியில் ஒரு கைப்பம்பு இறக்கப்பட்டுள்ளது. தற்போது வேலை முடிவுற்று மேற்படி கைப்பம்பு நல்ல நிலையில் இயங்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

*ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம்,*
*மேல்புவனகிரி.*

**பிரச்சினை :**

மூக்குப்பீறி கிராமத்திற்கு கடந்த 1—9—97 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ.26.9 இலட்சத்தில் ஒரு இலட்சம் கொள்ளளவு மேல்நிலை நீர்த் தொட்டி ஒன்றும், தென்திருப்போருரை ஆத்தூரான்கால் அருகில் 7.5 குதிரை சக்தி கொண்ட ஒரு போர்வெல்லும், 7 கி.மீ. தொலைவிலிருந்து தண்ணீர் மேல்நிலை நீர்த்தொட்டிக்கு வருகிறது. ஆனால், எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தேதி முதல் இன்றைய தேதி வரைக்கும் குடிநீர் உந்து குழாய்கள் தரமற்றவையாக இருப்பதால் சுமார் ரூ.10,000 வரை செலவு செய்து உடைப்பு மற்றும் அடைப்புகளை நீக்கியுள்ளோம்.

நாளது தேதி வரையில் குடிநீர் உள்ள குழாய்கள் உடைப்பு நின்றபாடில்லை. ஆதலால் மேற்கூறிய பம்பிங் ரூமிலிருந்து சுமார் 7 கி.மீ. வரையில் உள்ள பி.யு.சி. குழாய்(தரமற்ற)களை மாற்றி ஜி.ஐ.



பைப்புகளாக மாற்றி கொடுத்தால் எங்கள் ஊருக்கு கிடைக்கும் குடிநீர் சீராக கிடைக்கும். ஆதலால் TWAD மூலமாக மேற்கூறிய குறைபாடுகளை நீக்க புதிதாக ஜி.ஐ. பைப்புகள் மாற்றித்தர போர்க்கால நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

*பொதுமக்கள் சார்பாக*
*மு.செல்வக்கனி, தலைவர்,*
*மூக்குப்பீறி சிற்றூராட்சி, மூக்குப்பீறி,*
*தூத்துக்குடி மாவட்டம்.*

**தீர்வு :**

ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் மூக்குப்பீறி சிற்றூராட்சி குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்தில் சுமார் 900 மீட்டர் நீளத்திற்கு பிரதானக்குழாய் ஆரம்பத்தில் 140 மி.மீ. பி.வி.சி. குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. இதில் கப்ளர்கள் சரியாக பொருந்தாமல் இருந்ததால் சோதனை ஓட்டத்தின்போது அடிக்கடி நீர் கசிவு ஏற்பட்டது. நீர்கசிவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு சுமார் 2 மாதங்கள் வாரியத்தால் சோதனை ஓட்டம் மேற்கொண்ட பின்பு 1—9—97 முதல் பராமரிப்பிற்காக ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஒரு வருடமாக இக்குடிநீர்த் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. கடந்த ஒரு வருடத்தில் திட்டத்திற்கு மின்சாரம் 30305 யூனிட் ஏற்பட்டுள்ளது. 9/98இல் மின் இறைபானில் பழுது ஏற்பட்டது. அது சரி செய்யப்பட்டு 29-10-98 முதல் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. நிதிநிலை காரணமாக மனுவில் குறிப்பிட்டுள்ளபடி பிவிசி பைப்புகள் எல்லாவற்றையும் ஜி.ஐ.பைப்புகளாக மாற்ற இயலாது.

மேலும் நடப்பு நிதியாண்டில் ஒய்யான்குடி குடிநீர் திட்டத்திற்கு இத்திட்டத்திலிருந்து குழாய் நீடிப்பு செய்து திட்டம் முடிவடைந்து ஊராட்சி யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் செயல்படுத்தியதால் தற்போது உள்ள மூக்குப்பீறி நீருந்து குழாய்களில் அழுத்தம் குறைந்து உடைப்புகள் எப்பொழுதேனும் ஏற்படுவதும் நின்றுவிடும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*நிர்வாகப் பொறியாளர்,*
*குடிநீர் வடிகால் வாரியம்,*
*கிராமக்குடிநீர்த் திட்டக்கோட்டம்,*
*தூத்துக்குடி.*

**பிரச்சினை :**

எங்கள் ஊர் கடலூர் மாவட்டம், நடுவீரிப்பட்டு. இங்கு குறிஞ்சிப்பாடி — பாலூர் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் இருக்கின்றன. சைக்கிளில் கூட செல்லமுடியாத நிலை இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இந்த சாலைகளின் நடுவில் உள்ள ஊர்களான பத்திரகோட்டை, நடுவிரப்பட்டு, பாலூர் வரை நெடுகிலும் பள்ளமாக ரோடு உள்ளது. இந்த சாலைகளின் வழியாக தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களும், பேருந்துகளும் செல்கின்றன. கடந்த 4 வருடங்களாகவே நெடுஞ்சாலை துறையினரால் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே ஊர் மக்களாகிய நாங்கள் 'தமிழரசு' மூலம் விடிவு காண விழைகின்றோம்.

*ஊர் மக்கள் சார்பாக எஸ். சங்கரநாராயணன்*
*நடுவீரப்பட்டு. கடலூர் மாவட்டம்.*

**தீர்வு :**

குறிஞ்சிப்பாடி — பாலூர் சாலை கி.மீ.0/0-21/3 வரை இக்கோட்ட பராமரிப்பிலுள்ள இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் அவ்வப்போது நிதி நிலைமைக்கேற்ப ஒரு சில கி.மீ . சாலை பகுதிகள் தனிச்சீர் மற்றும் காலமுறை சீரமைப்பு பணியின் கீழ் சீரமைக்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்வாண்டில் கி.மீ. 9/900—11/0 வரையில் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் தார் புதுப்பித்தல் வேலை செய்யப்படவுள்ளது.

பழுதடைந்துள்ள சாலை பகுதிகள் வரும் நிதியாண்டில் நிதிநிலைமைகேற்ப முன்னுரிமை கொடுத்து சீர்செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*இரா.சண்முகம்,*
*கோட்டப் பொறியாளர் (நெகிப)*
*கடலூர்—1.*

**பிரச்சினை :**

நாகை மாவட்டம் சீர்காழி தாலுக்கா புதுத்துறை கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமமான திருநகரி, நெப்பத்தூர் போன்ற கிராமங்கள் வழியாக சீர்காழி — பெருந்தோட்டம் தடத்தில் இயங்கும் 5டி என்ற அரசு பேருந்து பயணிகள் பயணம் செய்யும் நிலையில் இல்லாது மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் இதைச் சார்ந்த கிராமங்களில் இருந்து செல்லும் பள்ளி, கல்லூரி மற்றும் அனைத்து பொதுமக்கள் மிகவும்

பாதிக்கப்படுகிறார்கள். இந்த தடத்தில் இயங்கும் ஒரே பேருந்தையாவது புதிய பேருந்தாக இயக்கினால் பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு கிடைத்திடும்.

எனவே, தாங்கள் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*பொதுமக்கள் சார்பாக ஆர்.மகேந்திரன்,*
*ஊராட்சிமன்ற துணைத்தலைவர்,*
*புதுத்துறை ஊராட்சி, நாகை மாவட்டம்.*

**தீர்வு :**

சீர்காழி கிளையிலிருந்து, சீர்காழி—பெருந்தோட்டம் (வழி) புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர் தடத்தில் கூண்டு முழுவதுமாக புதுப்பித்து கட்டப்பட்ட நல்ல நிலையில் உள்ள டிஎண்49/என்0620 என்ற பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

*மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*கும்பகோணம் கோட்டம்—1.*

# சிறப்பாக செயலாற்றும் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) சிறுதொழில் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் தமிழக அரசால் 1970ஆம் ஆண்டு நிறுவப்பட்டு கீழ்க்கண்ட பணிகளை ஆற்றி வருகிறது.

தொழிற்பேட்டைகளை அமைத்து, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய தொழிற்கூடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கி தொழில் முனைவோருக்கு தவணை முறை மற்றும் முழு விலையில் ஒதுக்கீடு செய்து வருகிறது.

அத்தியாவசிய மூலப்பொருட்களான இரும்பு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட், கல்கரி, காகிதம், ஈயம், துத்தநாகம் மற்றும் பாலிதீன் மூலப்பொருட்களை நியாய விலையில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

சிறுதொழில்களுக்கு விற்பனை உதவி திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்கு, உற்பத்தி பொருட்களை விற்பதற்கு ஆணைகள் பெற்று தருகிறது.

ஆர்வமுள்ள தொழில் முனைவர்களையும் சிறுதொழில் சங்கங்களையும் ஒருங்கிணைத்து தனியார் தொழில்பேட்டைகளை நிறுவுவதற்கு ஆலோசனைகளையும் அனைத்து உதவிகளையும் சிட்கோ செய்து தருகின்றது.

மேற்கூறிய பணிகளை சிறப்பாக செயலாற்றும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு கிளை அலுவலகம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**தொழிற்பேட்டைகள்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோணம் (அகஸ்தீஸ்வரம் வட்டம்) மற்றும் மார்த்தாண்டம் (விளவங்கோடு வட்டம்) ஆகிய இரண்டு இடங்களில் தொழிற்பேட்டைகள் தமிழக அரசால் 1964ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு சிட்கோவின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பின் கீழ் 1974முதல் இயங்கி வருகிறது.

கோணம் தொழிற்பேட்டை 20.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் 8 தொழிற்கூடங்கள், 27,மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 10 குறுந்தொழிற் கூடங்கள் அமைக்கப்பெற்று சிறுதொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் மூலமாக சுமார் 500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன.


மார்த்தாண்டம் தொழிற்பேட்டை 7.50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் 7 தொழிற்கூடமும் 8 மேம்படுத்தப்பட்ட மனைகளும் தொழில் முனைவோர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு 4.46 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் மூலமாக சுமார் 20 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ10 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன.

மேற்கூறிய தொழிற்பேட்டைகளில் விரிவுபடுத் துவதற்கு இடம் இல்லாமையால் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் தனியார் பட்டாநிலங்கள் புதிய தொழிற்பேட்டை தொடங்க தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

**விற்பனை உதவி செய்தல்**

இத்திட்டத்தின் கீழ் 54 சிறுதொழில் நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசு மற்றும்



அரசுத்துறை நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களை வழங்குவதற்காக சிறுதொழில் நிறுவனங்களின் சார்பாக ஒப்பந்தப் புள்ளிகளில் சிட்கோ பங்கு பெற்று சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கல் ஆணைகளை பெற்றுத்தருகிறது. சுமார் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள வழங்கல் ஆணைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்டு சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ★

# ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்திட மாநில விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

**மா**நில விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், சென்னை தரமணியிலுள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் 22–2–1999 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன், செய்தி–சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு.எஸ். இராஜரெத்தினம், செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க. முத்துசாமி,முதலமைச்சர் அலுவலக ஒருங்கிணைப்பாளர் திரு.லெட்சுமிகாந்தன் பாரதி, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரத் தலைவர் திரு.முக்தா வீ.சீனிவாசன், தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மற்றும் திரைப்பட, தொலைக்காட்சி நிறுவன இயக்குநர் திரு.பி.அமிர்தம், சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு.என்.ஜி.சீனிவாசா, அகில இந்திய வானொலியின் சென்னை நிலைய இயக்குநர் திரு.பி.ஆர்.குமார், பத்திரிகைத் தகவல் தொடர்பு கூடுதல் தலைமைச் செய்தி அலுவலர் திரு.டி.ஜி. நல்லமுத்து மற்றும் மத்திய மாநில அரசுகளின் செய்தி –தகவல் தொடர்புத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.**வ.முல்லைவேந்தன்** அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு :

***"தமிழகம், சாதி – சமயப்பிணக்கற்று நல்லிணக்கத்தோடு விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டை "தீண்டாமை ஒழிப்பு – மதநல்லிணக்க ஆண்டாகக்" கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதோடு, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்கென ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடும் தந்துள்ளார். அதனடிப்படையில், செய்தி –மக்கள் தொடர்புத்துறை பல்வேறு பிரச்சாரப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது.***

***இதைப்போன்று மத்திய அரசின் பத்திரிகைத் தகவல்–செய்திப்பிரிவு, தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, விளம்பரத்துறை, கண்காட்சிப்பிரிவு, இசை–நாடகப் பிரிவு ஆகியவை தீண்டாமை ஒழிப்புக் குறித்தும், மதநல்லிணக்கத்தை வலியுறுத்தியும் விளம்பரங்களை வெளியிட வேண்டுமெனத் தமிழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்".***

– என்று அமைச்சர் உரையில் குறிப்பிட்டார். ★



## தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தில் மதுரை வானொலியின் புதிய முயற்சி

மதுரை வானொலியின் திரை இசைக்கிடையே – "குவா, குவா" – எனக் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. அடுத்து –

*பெண் குரல்* : அழும் இந்தக் குரல் என்ன மதம்?

*ஆண் குரல்* : என்ன மொழி?

*பெண் குரல்* : என்ன ஜாதி?

இதைத்தொடர்ந்து, பள்ளிக்குழந்தைகளின் குதூகலக் குரலோசையும், சிரிப்பொலியும். மீண்டும் –

*பெண் குரல்* : இந்தச் சிரிப்பு என்ன மதம்?

*ஆண் குரல்* : என்ன மொழி?

*பெண் குரல்* : என்ன ஜாதி?

தொடர்ந்து –

*ஆண் குரல்* : காஷ்மீரின் பனிமலையும், குமரியின் கடலலையும், வங்கத்தின் பேரெழிலும், அரபிக் கடலலையின் சங்கநாதமும்

*பெண் குரல்* : மதம் அறியுமா? மொழி அறியுமா? ஜாதி அறியுமா?

*ஆண் குரல்* : இயற்கையிலும், குழந்தையிலும் வேறுபாட்டைக் காண்பது நியாயமா? நியாயமா?

*பெண் குரல்* : குருநானக்கின் உபதேச மொழியில், கபீரின் உன்னத வரிகளில், அக்பரின் தீன் இலாஹி, வள்ளலாரின் சன்மார்க்க நெறி

*ஆண் குரல்* : இப்படிப் பாரதம் தந்த சமத்துவத் தத்துவப் புதையல் எத்தனை? எத்தனை?

'சிந்தையில் ஆயிரம் சேர்ந்து வளர்ந்து சிறந்ததும் இந்நாடே' – பாடல்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



தூய

பட்டு

தூய

சரிகை



ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ் நாடு கைத்தறி

# தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23







